# கடல்சார் சூழல்
# பாதுகாப்பு அதிகாரசபை

## ஆண்டு அறிக்கை 2012

## சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு

## தொலைநோக்கு

*“2020ஆம் ஆண்டுக்குள் நிலைத்திருத்தல் தேசிய அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின் சேமநலனுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் இலங்கையைச் சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சூழலை உருவாக்குதல்”*

## செயற்பணி

*“தற்போதையதும், எதிர்காலத்திற்குமானதுமான சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின் ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும் மற்றும் வேறு மூலவளங்களினதும் அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் சடல் தீழ்ப்பை அடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அவசியமான திறன்களுடனும், தகுதியுடனும், தாபனரீதியான கட்டமைப்பினதும் மற்றும் உட்கட்டமைப்பு வரைச்சட்டத்தினதும் முகவராண்மையொன்றாக இருத்தல்.”*

# கூட்டுத் தகவல்

## பணிப்பாளர் சபை

**தலைவர்**

திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும, சட்டத்தரணி (01.10.2012இலிருந்து செயற்படத்தக்கதாக ராஜினாமா செய்தார்)

## பணிப்பாளர்கள்

| பெயர் | பதவிப்பெயர் | பிரதிநிதித்துவம் | ஆற்றலளவு | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ருபசிங்க | மேலதிகச் செயலாளர், சூழல் அமைச்சு | சூழல் அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | உறுப்பினர் | |
| கொமடோர் என்.ரொசைரோ | பணிப்பாளர், செயற்பாடுகள், இலங்கைக் கடற்படை | இலங்கைக் கடற்படைத் தளபதியின் பிரதிநிதி | உறுப்பினர் | 25.09.2012இலிருந்து செயற்படத்தக்கதாக ராஜினாமா செய்தார் |
| கொமடோர் என்.பி.ஆட்டியகல | பணிப்பாளர் - செயற்பாடுகள், இலங்கைக் கடற்படை | இலங்கைக் கடற்படைத் தளபதியின் பிரதிநிதி | உறுப்பினர் | 25.09.2012இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார் |
| திருமதி எஸ்.என். மாயாதுன்னே பண்டார | சட்ட ஆலோசகர், வெளி விவகார அமைச்சு | வெளி விவகார அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | உறுப்பினர் | |
| திருமதி.கே.குணவர்தன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம், அரசாங்க நிதித் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு | நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | உறுப்பினர் | 06.06.2012இலிருந்து செயற்படத்தக்கதாக ராஜினாமா செய்தார் |
| திரு.பி.எம்.எஸ்.ஜயதிலக்க | உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு | நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | உறுப்பினர் | 06.06.2012இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார் |
| திரு.எஸ்.பண்டார | மேலதிகச் செயலாளர், மீன்பிடித்தொழில் அமைச்சு | மீன்பிடித்தொழில் அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | உறுப்பினர் | |
| திரு.எ.டபிள்யு.எஸ்.எஸ்.ஆர். வீரக்கோன் | பணிப்பாளர் நாயகம், மேர்ச்சன்ட் ஷிப்பிங் திணைக்களம் | மேர்ச்சன்ட் ஷிப்பிங் பணிப்பாளர் நாயகத்தின் பிரதிநிதி | உறுப்பினர் | |
| திரு.மகேஷ் கட்டுலந்த | சட்டத்தரணி | கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் | உறுப்பினர் | |
| ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க | பொது முகாமையாளர், | | உறுப்பினர் | |

## சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர்

**தலைவர்**

திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும, சட்டத்தரணி - 01.10.2012இலிருந்து செயற்படத்தக்கதாக ராஜினாமா செய்தார்

**பொது முகாமையாளர்**

ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க RSP, VSV, USP

**பிரதிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள்**

கொமாண்டர் டபிள்யு.என்.தியம்பலனாகே - 15.02.2012இலிருந்து செயற்படத்தக்கதாக ராஜினாமா செய்தார்

**முகாமையாளர் - சட்டம்**

திருமதி எ.காரியவாசம் (LLB, M.Sc.)

**முகாமையாளர் - செயற்பாடுகள் (பதில்)**

திரு.எ.ஜே.எம்.குணசேகர (B.Sc., M.Sc.)

**கணக்காளர்**

திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன (B.Com. SP/LICA)

**உதவி முகாமையாளர் - செயற்பாடுகள்**

திரு.எ.ஜே.எம்.குணசேகர (B.Sc., M.Sc.)

**உதவி முகாமையாளர்கள் (மாகாணம்)**

திருமதி ரி.எஸ்.ரணசிங்க (B.Sc.)
திருமதி ரேணுகா ரணவீர (B.Sc.)
திரு.எல்.பி.ரைரஸ் (B.Sc.)
திரு.எச்.ரி.என்.ஐ.பியதாச (B.Sc., M.Sc.)

**உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடுகள்)**

திரு.ஆர்.என்.பிரியதர்ஷன (B.Sc.)

**உதவி முகாமையாளர் (மனித வளங்கள்)**

திருமதி டபிள்யு.எச்.கே.ஹிற்றிபண்டார (B.Sc.)

**உள்ளகக் கணக்காய்வாளர்**

திருமதி ஆர்.எச்.எச்.பிரேமசந்திர (B.B.A)

**உதவி முகாமையாளர் (நிருவாகம்)**

திரு.எஸ்.எம்.சி.குமாரகே (B.B.M.G.T.Sp.)

**நிருவாக உத்தியோகத்தர்**

திருமதி ஜி.பி.நிலான்ஜனி (B.A.Sp.)

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின்

## தொடர்பு விபரங்கள்

### தலைமை அலுவலகம்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
758, 2ஆவது மாடி, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி: 2687520 /2690604/2690605
∴பக்ஸ்: 2687451/4615960
ஈ-மெயில்:info@mppa.gov.lk
இணையதளம்:mppa.gov.lk

| | |
|---|---|
| **தென் மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - காலி மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>04, குளோசன்பேக் வீதி,<br>மாகலே,காலி.<br>தொலைபேசி: 091-2233547/0718-214184<br>∴பக்ஸ்: 091-2233547 | **பிராந்திய அலுவலகம் - மாத்தறை மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>இல.18 வில்மட் பாலசூரிய மாவத்தை,<br>நூபே, மாத்தறை.<br>தொலைபேசி: 041-2234250/ 0718-100817<br>∴பக்ஸ்: 041-2234250 |
| **பிராந்திய அலுவலகம் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>1/2 , சிங்ககிரி,<br>பெத்தவல வீதி, ஹம்பாந்தோட்டை.<br>தொலைபேசி: 047-2222372/0718181430<br>∴பக்ஸ்: 047-2222372 | **பிராந்திய அலுவலகம் - களுத்துறை மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>இல. 187, கொழும்பு வீதி, பேருவளை.<br>தொலைபேசி: 034-2298407/0718-576401<br>∴பக்ஸ்: 034-2298407 |
| **பிராந்திய அலுவலகம் - புத்தளம் மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>இல.23 ஈபேர்ட் சில்வா வத்த,<br>கொழும்பு வீதி, சிலாபம்<br>தொலைபேசி: 032-2222865/ 071-3351000<br>∴பக்ஸ்: 032-2222865 | **பிராந்திய அலுவலகம் - கம்பஹா மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>இல. 704/9A, 2ஆவது கருணா,<br>கொழும்பு வீதி, நீர்கொழும்பு.<br>தொலைபேசி: 031-2228606/718-100821<br>∴பக்ஸ்: 031-2228606 |
| **கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - திருகோணமலை மாவட்டம்**<br>கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை<br>04, மைல் கல், சீனன்குடா, திருகோணமலை.<br>தொலைபேசி: 026-2050805/0718-383363<br>∴பக்ஸ்: 026-2050805 | |

# தலைவரின் செய்தி

2008இன் இல.35 கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் முன்னேற்றத்தையும் மற்றும் 2012ஆம் ஆண்டுக்கான முன்னேற்றத்தையும் உள்ளடக்கும் 2012ஆம் ஆண்டுக்கான கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை முன்வைப்பதையிட்டு நான் அளப்பரிய மகிழ்ச்சியடைகின்றேன்.

2012-2016 காலத்திற்கான கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் புதிய கூட்டாண்மைத் திட்டம் புதியதொரு திசையை நோக்கி அதிகாரசபையைக் கொண்டு செல்லும் மூலோபாயங்களுடனும், வருடாந்த செயல் திட்டங்களுடனும் தயாரிக்கப்பட்டதுடன், இது 2012 ஜுலையிலிருந்து 2016 ஜுலை வரை செயற்படத்தக்கதாக இருக்கும். 2008இன் இல.35 அதிகாரச்சட்டத்தினாலும், அதிகாரசபையின் குறியிலக்குகளின் சாதனையினாலும் அதிகாரசபையின் உடமையாக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதை இயலச் செய்வதற்கு எதிர்காலத்திற்கான மகிந்த சிந்தனைத் தொலைநோக்கின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2008இன் இல.35 கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் பிரிவின் 51இன் பிரகாரம் எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் தொடர்பானதும் அத்துடன் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம் தொடர்பானதுமான ஒழுங்குவிதிகள் கப்பல்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதிலும், கப்பலிலிருந்து கப்பலுக்கு இடமாற்றுவதிலும் கடல்சார் சூழலுக்கு விளைவிக்கப்படக்கூடிய தீழ்ப்பினை குறைந்தபட்சமாக்கும் நோக்கத்திற்காக சுமத்தப்பட்டுள்ளது. அதேவேளை, அதிகாரச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட வேண்டிய ஏனைய ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு, சட்ட வரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2012 ஓகஸ்ட் 23 அன்று பாணந்துறைக்கு அப்பால் உள்ள கடலில் மூழ்கிய "*M.V. THERMOPYLAE SIERRA*" என்ற பெயரிலான கப்பலினால் கடல்சார் சூழலுக்கு விளைவிக்கப்பட்டிருக்கக்கூடிய அளப்பரிய சேதத்தைக் குறைந்தபட்சமாக்குவதற்கு அதிகாரசபையின் தலையீடு அதை சாத்தியப்படுத்தியுள்ளது. எனினும், எண்ணெய் சிந்துதல் ஒன்றில் கடல்சார் சூழலுக்கு விளைவிக்கப்படக்கூடிய சேதத்தைக் குறைந்தபட்சமாக்குவதற்கு வழிமுறையானதும், முறைமையானதுமான முறைமைகளுக்கான அவசியத்தை இந் நிகழ்வு மீள்-வலியுறுத்துகின்றது.

இறுதியாக, 2012ஆம் ஆண்டின் போது, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் நிறைவேற்றுவதன் மூலம் நீடித்த அவர்களது அயராத ஒத்துழைப்புக்காக பணிப்பாளர் சபைக்கும், பொது முகாமையாளருக்கும் மற்றும் பணியாளருக்கும் நன்றி கூற விரும்புகின்றேன். சூழல் அமைச்சின் செயலாளருக்கும், அமைச்சின் பணியாளருக்கும் அத்துடன் சகல நிறுவனங்களின் பணியாளருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். எமது முயற்சிகளில் பெறுமதியிலான ஆலோசனையையும், வழிகாட்டலையும் எமக்கு வழங்கிய சூழல் அமைச்சர் கௌரவ அனுர பிரியதர்ஷன யாபாவுக்கு எனது விசேட நன்றியறிதல்களை விடுக்கின்றேன்.

ரி.என்.விஜேகுணவர்தன
தலைவர்

## உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| 1. | பின்னணி | |
| | 1.1 அறிமுகம் | 1 |
| | 1.2 அதிகாரசபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 1-2 |
| 2. | தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு | 3-11 |
| 3. | பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் | |
| | 3.1 நிருவாகப் பிரிவு | 12 |
| | 3.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 13-16 |
| | 3.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 17 |
| | 3.4 சட்டப் பிரிவு | 17-18 |
| | 3.5 நிதிப் பிரிவு | 18-21 |
| 4. | அதிகார சபையின் இறுதிக் கூற்றுக்கள் | |
| | 4.1 கணக்கீட்டுக் கொள்கைகள் | 22-24 |
| | 4.2 2012 டிசம்பர் 31இல் உளள்வாறு நிதிசார் நிலையின் கூற்று | 25 |
| | 4.3 201ஆம் ஆண்டுக்கான நிதிசார் செயற்றிறனின் கூற்று | 26 |
| | 4.4 201ஆம் ஆண்டுக்கான ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று | 27 |
| | 4.5 201ஆம் ஆண்டுக்கான பணப்புழக்கக் கூற்று | 28 |
| | 4.6 நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 29-39 |
| 5. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 40-52 |

# 1. பின்னணி

## 1.1 அறிமுகம்

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேச ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இலங்கையின் நிலத் திணிவின் அளவின் எட்டுத் தடவைகள் சமுத்திரத்தில் உள்ள பகுதியொன்றின் வளங்களை இலங்கை அறுவடை செய்வதற்கு உரித்தினைக் கொண்டுள்ளது. சமுத்திரத்தின் இப் பகுதியில், கிழக்கத்திய மற்றும் ஒட்சியேற்ற சர்வதேச கப்பலோட்ட வழிகள் அமைந்துள்ளன. இலங்கையின் ஆட்புல நீர்கள் பெருமளவு இயற்கையான வளங் களுடன் செழுமைமிக்கதுமாகும். எனினும், கப்பலோட்டத்தின் தாக்கங்களின் காரண மாகவும், நிலம் மீதான மனித செயற்பாடுகளின் காரணமாகவும் தரம் குன்றுகின்றது.

கடல்சார் சூழல் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கும், தடுப்பதற்கும் அவசியமான நடவடிக்கையை எடுப்பதற்காக 1981இன் இல.59 கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரசபை அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இல.59 கடல்சார் தடுப்பு அதிகாரச்சட்டம் நீக்கப்பட்டு, கடல்சார் சூழலின் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச சமவாயங்களை அமுல்படுத்து வதற்கும், தீழ்ப்பின் நிகழ்ச்சி மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரசபையில் உடமையாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மேலும் பலப்படுத்துவதற்கான நோக்க மொன்றுடன் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச்சட்டம் நிறைவேற்றப் பட்டது. இது 2009 ஜனவரி 01 அன்று அமுலுக்கு வந்தது. இந்த அதிகாரச் சட்டத்தின் கீழ், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையாக கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரசபை மீள்-பெயரிடப்பட்டது.

கடற்படை முனையொன்றாக இலங்கையின் அபிவிருத்தியை "**மகிந்த சிந்தனை**" வலியுறுத்துகின்றது. இப் புதிய தொலை நோக்கின் அங்கமொன்றாக புதிய துறைமுகங்கள் கட்டப்படுவதுடன், பழைய துறைமுகங்கள் மேலும் திருத்தப்படுகின்றன. மேலதிகமாக, சமுத்திரத்தின் வளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுகின்றன. இந்த அபிவிரு த்தித் திட்டங்களின் காரணமாக இடம்பெறக்கூடிய ஏதாவது தீழ்ப்பைத் தடுப்பதற்காகவும் அத்துடன் அவற்றின் நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்து வதற்காகவும் க.சூ.பா. அதிகாரசபை கோரப்பட்டுள்ளது.

கடல்சார் சூழலின் தீழ்ப்பினைக் குறைந்த பட்சமாக்குவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் தடுப்பதற்கும் பொறுப்பான முகவராண்மையாக பன்மைத்தன்மையிலான திட்டங்களில் க.சூ.பா.அதிகாரசபை ஈடுபட்டு ள்ளது.

## 1.2 அதிகாரசபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

(1) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதியாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(2) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்ப தற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்குமான செயற்திட்டமொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.

(3) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப் படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முக வராண்மைகளுடனும் நிறுவனங் களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(4) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப் படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்ப தற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.

(6) இலங்கை அரசாங்கம் ஏற்றங் கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கியுள்ள அல்லது அங்கீகரி த்துள்ள அல்லது ஏற்றங்கீகரிக்கக் கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, இணங்கக்கூடிய அல்லது அங்கீகரிக்கக் கூடிய கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடுகளையும் கடைப் பிடிப்பதனை விதந்து ரைத்தல்.

(7) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா நிகழ்வுத் திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப் படுத்தலும்.

(8) பெற்றோலியம் அல்லது அது தொடர் பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற் கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர்களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்கு படுத்துதலும், கண்காணித்தலும்.

(9) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்பு ணர்வை உருவாக்குதல்.

(10) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

(11) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப் படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்படையிலான கடல்சார்ந்த தொடர் பிலான நடவடிக்கையினால் பயனுறுதி யுடன் பாதுகாத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(12) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வுகளையும், விசாரணை களையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(13) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத் திற்காக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்களின் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப் படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல் சார்ந்த வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்கு வரத்தையும், எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்.

# 2. தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு

2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் அமுலாக்கமே கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பொறுப்பாகும். கப்பல்களினாலும், நில அடிப்படையிலான செயற்பாடுகளினாலும் மற்றும் கடல்சார் சூழலைப் பாதிக்கின்ற கடல்சார் சூழலில் நிறைவேற்றப்படுகின்ற வேறு செயற்பாடுகளினாலும் விளைவிக்கப்படும் கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கும், கட்டுப்படுத்து வதற்கும் அத்துடன் நிருவகிப்பதற்கும் ஆண்டின் போது அதிகாரசபையினால் பின்வரும் செயற்றிட்டங்களும், நடவடிக்கைளும் எடுக்கப் பட்டன.

நில மற்றும் கடல் அடிப்படையிலான செயற்பாடு களினால் விளைவிக்கப்படுகின்ற கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் நிருவகிக்கும் நோக்கத்திற்காக கொள்கையை வகுத்தமைப்பதிலும் அத்துடன் கொள்கைகளின் அமுலாக்கத்திற்கு அவசியமான சகல தொழில்நுட்பத் தொழிற்பாடுகளிலும் அதிகாரசபையின் தொழில்நுட்பப் பிரிவு ஈடுபட்டுள்ளது. தமது செயற்பாடுகளின் அங்கமொன்றாக தொழில்நுட்பத் தேவைப் பாட்டினையும், மற்றும் சட்டத் தேவைப் பாட்டினையும் அவர்கள் கட்டுப்படுவதை உறுதிப்படுத்துமுகமாக பகுதியில் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு உத்தரவுப் பத்திரங்களை தொழில்நுட்பப் பிரிவு வழங்கு கின்றது.

## 01. தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகால திட்டத்தை (NOSCOP) அமுலாக்கல்

மேற்குடன் மேற்கத்தை இணைக்கின்ற கப்பலோட்ட பாதைக்கு அருகில் இலங்கை அமைந்திருப்ப தனால், இலங்கைக்கு அருகாக பாரிய எண்ணிக்கையிலான கப்பல்கள் செல்லுகின்ற அதேவேளை, சுமார் 5,000 கப்பல்கள் ஒவ்வொரு வருடமும் நாட்டின் துறைமுகங்களை அடைகின்றன. இவ்வலயத்தில் அதிகளவிலான கப்பலோட்ட நெருக்கடி உள்ளதனால் விபத்தின் காரணமாக எண்ணெய் சிந்துதலுக்கு உயர்வான ஆற்றளலவொன்று உள்ளது. இலங்கையில் மன்னார் வடிநிலத்தில் எண்ணெய் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளதனால், இந்த ஆற்றலளவு இன்னும் அதிகமாக அதிகரிக்க முடியும். எனவே, 2004இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் வகுத்தமைக்கப் பட்ட தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தைப் புதுப்பிப்பதற்கும், அமுலாக்குவதற்கும் 2012ஆம் ஆண்டில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம் அமுல்படுத்தப்படும் போது, அதனுடன் கைகோர்த்துச் செல்வதற்கு மாவட்டத் திட்டங்களைக் கொண்டிருப்பது அவசியமான தாகும். இதனால், ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் தொடர்பில் மாவட்ட மட்ட திட்டங்கள் வகுத்தமைக்கப்பட்டு, முடிவாக்கப் பட்டு, 2012ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சம்பந்தமாக மாவட்டங்களினுள் விழிப்பியல் செயற்திட்டங்கள் நடத்தப்பட்டன.

எண்ணெய் சிந்துதல் ஒன்றின் போது விரைவாகச் செயற்படுவது முக்கியமானதாகும். இடம்பெறக் கூடிய தீழ்ப்பிலிருந்து சூழல்ரீதியில் கூருணர்விலான பகுதியைப் பாதுகாப்பதற்கு இது விசேடமாக உதவும். எனவே, எண்ணெய் சிந்துதல் ஒன்றின் போது, கடல்சார் சூழல்முறைமைகளின் பாதுகாப்பு மீது கிராம மட்டத்தில் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக கரையோர மாவட்டங்களினுள் ஒரு தொடரிலான விழிப்பியல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. உள்ளூர் மூலப்பொருட்களிலிருந்து செய்யப்படக்கூடிய புதுமையாக்கப்பட்ட பாய்மரக் கழயைப் பயன்படுத்தி எண்ணெய் சிந்துதலிலிருந்து சூழலை எவ்வாறு பாதுகாப்பது என்பது மீது பங்கெடுப்பாளர்கள் தெளிவாக்கப்பட்டனர்.





*எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தை வகுத்தமைப்பதற்கான செயலமர்வு - காலி மாவட்டம்*



*உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பாய் மரக்கழி ஒன்றை (எண்ணெய்க்கான ஒரு பௌதீகத் தடை) எவ்வாறு செய்வது என்பதற்கான செய்துகாட்டல் - புத்தளம் மாவட்டம்*

**மாவட்ட மட்டத்தில் விழிப்பியல் செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்**

| மாவட்டம் | அரசாங்க முகவராண்மை களிலிருந்தும், அ.சா.தாபனத்தி லிருந்தும் அலுவலர்களின் எண்ணிக்கை | பயிற்றுவிக்கப்பட்ட கிராமிய மக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | 31 | 121 |
| மாத்தறை | 66 | |
| காலி | 52 | 121 |
| களுத்துறை | 12 | 287 |
| கொழும்பு | | 180 |
| கம்பஹா | 275 | 123 |
| புத்தளம் | 275 | 266 |
| திருகோணமலை | 40 | |
| மட்டக்களப்பு | 40 | |

## 1.2 தேசிய எண்ணெய் சிந்துதல் அவசர காலத் திட்டத்தை அமுல்படுத்துவதில் முதலாவது பதிலிறுப்பாளர்களுக்கு வடிவமைக்கப்பட்ட எண்ணெய் மற்றும் அபாயகரமான பதார்த்தங் களினால் சமுத்திரத்தின் தீழ்ப்பு மீது நான்கு நாள் தேசிய செயலமர்வு

எண்ணெயினால் கடல்சார் தீழ்ப்புக்கு பதிலிறுப்பதற்காக 1999 - எண்ணெய் தீழ்ப்பு தயார்நிலை பதிலிறுப்பு, ஒத்துழைப்பு மீதான சர்வதேச சமவாயம் மற்றும் 2000- அபாயகரமானதும், நச்சுத்தன்மையிலானதுமான பதார்த்தங்கள் மீதான சர்வதேச வரைவுடன்பாடு ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டு நான்கு நாள் செயலமர்வு 2012 ஜூன் 26 முதல் 29 வரை ராஜகிரியவில் வங்கியாடல் கற்கைள் நிலையத்தில் நடத்தப்பட்டது.



## 2. ஊடுருவுகின்ற அங்கிகளின் பரவுகையைக் கட்டுப்படுத்துவதற்கு அடிச்சுமை நீரின் முகாமைத்துவம்

தமது சமநிலையைப் பராமரிப்பதற்காக கப்பல்கள் கடல்நீரைப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படும் நீரானது அடிச்சுமை நீர் என அழைக்கப்படுகின்றது. கடல்சார் சூழலுக்கு அடிச்சுமை நீரிலிருந்து அனுப்பப்படும் அங்கிகளில் சில மூர்க்கத்தனமாக நடந்து, சூழல் முறைமைக்கு பயமுறுத்தல்களை முன் வைக்கின்றன. எனவே, கடல்சார் சூழல் முறைமையைப் பாதுகாப்பதற்காக இச் சூழ்நிலையைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது முக்கியமானதாகும்.

2004-கப்பல்களின் அடிச்சுமை நீருக்கும், வண்டலுக்குமான கட்டுப்பாட்டுக்கும், முகாமைத்துவத்திற்குமான சர்வதேச சமவாயத்தில் இலங்கை இதுவரை கைச்சாத்திடாத போதும், கடல்சார் சூழலின் பாதுகாப்புக்கு சமவாயம் முக்கியமானது என்பதனால், அதற்கு

தரப்பொன்றாக வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா, மும்பையில் 2012 மே 29இலும், 30இலும் தென் கிழக்கு பிராந்திய எண்ணெய நிரப்புதல், இறக்குதல் நீர் முகாமைத்துவ மூலோபாயமொன்றை வகுத்தமைப் பதற்காக ஒரு பிராந்திய செயலமர்வு நடந்ததுடன், இந்திய அரசாங்கத்தின் கப்பற்றுறை பணிப்பாளர் நாயகம் தலைமைதாங்கினார். இதில் அதிகாரசபையின் தலைவரினால் தலைமை வகிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிலிருந்து இலங்கை பேராளர் குழுவொன்று பங்கெடுத்தது. இதில் இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகியன பங்கெடுத்தன. இம் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பின்துரந்து, தேசிய அடிச்சுமை நீர் முகாமைத்துவ மூலோபாய மொன்றை வகுத்தமைப்பதற்கு அவசியமான ஆரம்பப் பணிகளை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை நிறைவேற்றியது. இந் நோக்கத்திற்காக தேசிய அடிச்சுமை நீர் செயலணியொன்று தாபிக்கப்பட்டதுடன், இது இலங்கைத் துறைமுக அதிகாரசபை, சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, மீன்பிடித்தொழில் திணைக்களம், கப்பற்றுறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியனவற்றிலிருந்து பிரதிநிதிகளை கொண்டிருந்தது. பின்வருவன மீது நோக்கினைக் கொண்டு, மூன்று குழுக்களாக அதன் பணிகளைச் செயலணி ஆரம்பித்தது.

i. அடிச்சுமை நீரின் முகாமைத்துவம் தொடர்பில் நடைமுறையிலான சட்ட நிலையை ஆய்தல்
ii. துறைமுகங்களினதும், கப்பற்றுறையினதும் தகவைலத் தொகுத்தல்
iii. கடல்சார் சூழல் முறைமைகள் மீதான தகவலைத் திரட்டுதல்

## 3. துறைமுக உயிரியல் அடிமட்ட அளவீடு மீது தேசிய செயலமர்வு

அடிச்சுமை நீரின் முகாமைத்துவத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் சர்வதேச சமவாயத்திற்கு தரப்பொன்றாக வருவதில் இலங்கையின் துறைமுகத்தில் கடல்சார் சூழல் மீது தரவுத்தளமொன்றை கொண்டிருப்பது அத்தியா வசியமாகும். இதை நோக்கிய முதலாவது நடவடிக்கையொன்றாக, துறைமுகங்களுடன் இணைந்துள்ள உயிரியல் அளவீடுகளைப் பொறுப்பேற்கும் நோக்கத்திற்காக தேசிய அடிச்சுமை நீர் முகாமைத்துவ செயலணியின் உறுப்பினர்களையும், வேறு பங்காளர்களையும் தெளிவுபடுத்துவதற்காக ராஜகிரியவில் உள்ள வங்கியாடல் ஆய்வுகள் நிலையத்தில் 2012 நொவம்பர் 28இலும், 29இலும் ஒரு தேசிய விழிப்பியல் செயலமர்வு நடத்தப்பட்டது. இச் செயலமர்வில் வள நபர்களாக இந்தியாவில் தேசிய சமுத்திரவியல் நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானிகளான கலாநிதி சி.எ.அனில் மற்றும் எஸ்.எஸ்.சிவராம் ஆகியோர் பங்கெடுத்தனர். இரண்டாவது நாளன்று, கொழும்புத் துறைமுக இடப்பரப்புக்கு ஒரு வெளிக்கள வருகைதரல் செய்யப்பட்டது.



*துறைமுகங்களுடன் இணைந்துள்ள உயிரியல் ஆய்வு மீதான தேசிய செலமர்வில்*



கொழும்புத் துறைமுகத்திற்கு வெளிக்கள வருகைதரல்

## 4. ஒழுங்குவிதிகளை உருவாக்குதல்

2008இலும் இல.35 கடல்சார் தீழ்ப்பு அதிகாரச் சட்டத்தின் அமுலாக்கத்திற்கு அவசியமான ஒழுங்குவிதிகளில், இரு முக்கியமான ஒழுங்குவிதிகள் வரையப்பட்டு, 2012ஆம் ஆண்டின் 'கசட்'படுத்தப்பட்டது.

### i. எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் ஒழுங்குவிதிகள்

எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் சேவைகளை மேற்கொள்வதில், அதாவது கடலில் ஒரு கப்பலில் இருந்து இன்னொரு கப்பலுக்கு நிரப்பிய எண்ணெயை விநியோகிப்பதில் எண்ணெய் சிந்துதலொன்றின் காரணமாக சமுத்திரம் தீழ்ப்படைய முடியும். இது ஒன்றில் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ளவர்களின் கவனமின்மையினால் அல்லது பயன்படுத்தப்படும் கருவியில் உள்ள பழுதினால் விளைவிக்கப்படலாம். எனவே, எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் அத்துடன் எண்ணெயை ஏற்றிஇறக்குவதற்காகப் பயன்படுத்தப் படும் கப்பல்களையும், படகுகளையும் சொந்தமாகக் கொண்டுள்ள நிறுவனங்களை பதிவுசெய்வதன் மூலமும் அத்துடன் அவற்றின் தொழில்நுட்பத் தகுதியை தொடர்ச்சியான கண்காணிப்பதற்கு உட்படுத்துவதன் மூலமும் கடல்சார் சூழலுக்கான தீழ்ப்பினைக் கட்டுப்படுத்து வதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்படுகின்றன.

### ii. எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்ட ஒழுங்குவிதிகள்

கடல்சார்சூழலில் திரண்டுள்ள எண்ணெயின் காரணமாக உயிர்வாழ்கின்றதும், உயிர் வாழாததுமான பொருளுக்கு கெடுதல் விளைவிக்கப்படுவதால், எண்ணெயினால் விளைகின்ற தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்கு வதற்காக, அவசியமான சட்ட அலுவல்களைப் பொறுப்பேற்கும் பொருட்டு அதிகாரசபையுடன் அதிகாரத்தை உடமையாக்குவது மிகவும் முக்கியமானதாகும்.

மூன்று மட்டங்களின் கீழ் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தின் அமுலாக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. இது சிந்துகின்ற எண்ணெயின் அளவில் அடிப்படையைக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம், பின்வருமாறு எண்ணெய் சிந்துதல் வகைப்படுத்தப்படுகின்றன:-

மட்டம் I - 59 மெட்ரிக் தொன்கள் கொண்ட எண்ணெய் வரை

மட்டம் II - 50 - 100 மெட்ரிக் தொன்கள் கொண்ட எண்ணெய் வரை

மட்டம் III - 100க்கு மேற்பட்ட மெட்ரிக் தொன்கள் கொண்ட எண்ணெய் வரை

மட்டம் Iஇன் எண்ணெய் சிந்துதலொன்றைப் பொறுத்தளவில், கடல்சார் சூழலுக்கு தீழ்ப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு எண்ணெய் சிந்துதலுக்கு இட்டுச்செல்லும் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள தாபனத்துடன் தங்கியுள்ளது. இதனால், உரிமையாளர்கள், இறங்குதுறையின் இயக்குனர், துறைமுகம், முடிவிடங்கள், குழாய்வழிகள் அல்லது துறைமுகம், இறங்குதுறை, முடிவிடம், கப்பல் யார்ட்சாலைகள் அல்லது ஒடுங்கிய வடிநிலம் ஆகியவற்றில் எண்ணெயை இடமாற்றுவதற்காக பயன்படுத்தப் படும் ஏதாவது வேறு சாதனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களினால் அல்லது கப்பலில் இருந்து கப்பலுக்கு எண்ணெயை இடமாற்றுவதற்கு அல்லது எண்ணெயை பிரித்தெடுப்பதற்கு அல்லது இடமாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் கடற்கரைக்கு அப்பாற்பட்ட நிருமாணங்களுக்கு பயன்படுத்துபவர் களினால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எண்ணெய் சிந்துதல் நிகழ்வொன்றில் அமுல்படுத்தப்படுவதற்கான திட்டமொன்றை அவர்கள் வகுத்தமைக்கவும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகாரத்திற்காக அதைச் சமர்ப்பிக்கவும் அத்துடன் அவசியமான போதெல்லாம் அதைப் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கவும் வேண்டும். எனவே, தயார் நிலையில் இருப்பதற்கும், நன்கு திட்டமிட்டிருப்பதற்கும் அத்துடன் ஒழுங்கு படுத்துவதற்கும் கப்பற்றுறையில் சம்பந்தப்பட்டுள்ள தாபனங்களுக்கு அத்தியாவசியமானதாகும். நடைமுறையைக் கட்டுப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் அவசியமான அதிகாரங்களை வழங்குவதில் இந்த ஒழுங்குவிதிகள் குறிக்கோளைக் கொண்டுள்ளன.

## 5. சொந்துரு சயுர செயற்திட்டம்

கடல்சார் தீழ்ப்பின் காரணிகளில் 90%ஆனவை நிலத்துடன் இணைந்து இடம்பெறுவதனால், கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கு நிலத்திலிருந்து சமுத்திரத்திற்கான தீழ்ப்புக்கள் இணைந்து கொள்வதைக் குறைந்தபட்சமாக்குவது மிகவும் முக்கியமாகும். இந் நோக்கத்திற்காக சொந்துரு சயுர செயற்றிட்டத்தின் கீழ் பெருமளவு செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

### i. சமுத்திரத்தினுள் பாயும் நீரோட்டங் களில் தீழ்ப்பின் மட்டத்தைச் சோதித்தல்

பாரிய ஆறுகளிலிருந்து சிறிய வடிகால்களுக்கான நீரோட்டங்கள் சமுத்திரத்திற்கு தீழ்ப்புக்களை கொண்டு செல்லும் மூலங்களாக அமைவதனால், இந்த நீரோட்டங்களில் ஓடுகின்ற நீரின் தரம் தொடர்பான தரவுகள் கடல்சார் தீழ்ப்பினைக் கவனத்திற்கெடுப்பதில் அளப்பரிய முக்கியத்துவத்தைக் கொண்டதாகும். இந்த தரவைப் பயன்படுத்தி, இந்த நீரோட்டங்களில் நீர் பற்றிய கருத்தொன்றைப் பெறுவதும் தீழ்ப்புக்கள் விடுவிக்கப்படும் முனைகள் பற்றிய விபரங்களை திரட்டுவதும் சாத்தியமானதாகும். புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த நீரோட்டங்களின் தரத்தின் மீது பௌதீக மற்றும் உயிரியல் தரவுத்தளம் உருவாக்கப்பட்டதுடன், அவை GPS இணைப்புக்களை பெறுவதன் மூலம் வரைபடமிடப்பட்டன.

### ii. கடல் குளிப்புக்கு பயன்படுத்தப்படும் நீரின் தரத்தைச் சோதித்தல்

நேரடியாக கடல் நீரை தீழ்ப்பாக்கும் சமுத்திரம் கடல் குளிப்பொன்றை மேற்கொள்ளும் போது மனித சுகாதாரத்தைப் பாதிக்கின்றது. இதன் ஊடாக பெருமளவு சுகாதாரப் பிரச்சனைகளுக்கு பலரும் முகங்கொடுக்கின்றனர். கடல் குளிப்புக்கு பொருத்தமான கடல் நீருக்கான சாராமாறிகளைப் பெருமளவு நாடுகள் திட்டமிட்டுள்ளன. இதன் ஊடாக, கடல் குளிப்பின் போது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அவற்றினால் முடிந்துள்ளது.

கடல் குளிப்புக்கான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் உல்லாசப்பயணிகள் தெரிவுசெய்கின்ற அமைவிடங்களில் கடல்நீரின் தரத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல் இந் நாட்டின் உல்லாசப்பயணத்தை விருத்திசெய்வதற்கு முக்கியமானதாகும். எனவே, புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களில் கடல் நீரின் தரம் மாதத்திற்கு ஒரு தடவை சோதிக்கப் படுவதுடன், இந் நோக்கத்திற்காக விசேடமாக தாபிக்கப்பட்ட தரவுத்தளமொன்றில் பதிவு செய்துள்ளது. இது தீழ்ப்பினை அடைவதற்கான உத்தேசத்தைக் கொண்டிருந்த அல்லது கொண்டுள்ள அமைவிடங்களை அடையாளங் காண்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளதுடன், தீழ்ப்புக்களின் மட்டங்களை குறைந்த பட்சமாக்குவதற்கு தீர்வையிலான நடவடிக்கை க்காக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அறிவிக்கின்றது.

### iii. கடல்சார் தீழ்ப்புக்களின் மூலங்களின் பொருட்பட்டியலொன்றைத் தயாரித்தல்

கடல்சார் தீழ்ப்புக்களின் மூலங்களை அடையாளங்காணுமுகமாக கரையோர மாவட்டங்களில் அளவீடொன்று நடத்தப்பட்டது. விசேடமாக, கடலோர ஹொட்டேல்களும், தொழிற்சாலைகளும் அளவீட்டுக்கு உட்பட்டன. தோதான பரிகரிப்பு இன்றி கடலினுள் கழிவுநீர் மற்றும் கழிவுப் பதார்த்தம் ஒழிக்கப்படும் தருணங்களில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் அதிபர்களினதும், ஹொட்டேல் காரர்களினதும் விழிப்பியல் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலதிகமாக, தீழ்ப்பினை நோக்கிய போக்கொன்றைக் கொண்டுள்ள தாபனங் களினதும், தொழிற்சாலைகளினதும் மீதும், காலப்போக்கில் தீழ்ப்பில் அதிகரிப்பின் போக்கு மீதும் தரவுகளைப் பெறுவதற்கு அதிகாரசபைக்கு இந்தப் பொருட்பட்டியல் இயலச்செய்துள்ளது.

### iv. விழிப்பியல் செயற்றிட்டம்

கடல்சார் சூழலுடன் இணைந்துள்ள கடல் நீர் தர சோதனைகளின் ஊடாகவும், அளவீடுகளின் ஊடாகவும் தொகுக்கப்பட்ட தகவல் மீதான அடிப்படையில் மக்களின் விழிப்பியல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது.

இது மக்களின் விழிப்பியலை உயர்த்துவதையும், கடலைப் பயன்படுத்துவதில் அதிகளவு எச்சரிக்கையுடன் இருப்பதன் மூலமும், அத்துடன் தீழ்ப்புக்களை அடையாளங் கண்டு, அவற்றைக் கட்டுப்படுத்துவதில் உதவியளிப்பதன் மூலமும் தமது ஒத்துழைப்பை நீடிப்பதற்கு அவர்களை வேண்டுவதையும் குறிக்கோளாக கொண்டுள்ளது.

## 6. பாடசாலை கடல்சார் குழு

சமுத்திரத்துடன் இணைந்துள்ள சூழல் பெறுமதியை எதிர்காலச் சந்ததி புரிந்து கொள்வதையும், கடல்சார் சூழலைப் பாதுகாப்பதை நோக்கி போக்குகளுடன் எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதையும் மேற்கொள்ளும் நோக்கமொன்றுடன் பாடசாலை கடல்சார் குழுக்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கின்றது. 2012ஆம் ஆண்டினுள் தாபிக்கப்பட்ட பாடசாலை கடல்சார் குழுக்களுடன், தற்போது கரையோர மாவட்டங்களில் தொழிற்படுகின்ற பாடசாலை கடல்சார் குழுக்களின் எண்ணிக்கைகள் வருமாறு:

| மாவட்டம் | பாடசாலை கடல்சார் குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 35 |
| மாத்தறை | 35 |
| காலி | 35 |
| களுத்துறை | 35 |
| கொழும்பு | 19 |
| கம்பஹா | 25 |
| புத்தளம் | 32 |
| திருகோணமலை | 07 |
| மட்டக்களப்பு | 10 |
| அம்பாறை | 10 |

பாடசாலை கடல்சார் குழுவொன்றில் உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 25 ஆகும். 2012ஆம் ஆண்டின் ஊடாக, கடல்சார் சூழல் மீது அவர்களது அறிவை உயர்த்துமுகமாகவும், அதைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அவர்களின் ஊடாக சமூகத்தில் பதியவைக்குமுகமாகவும் மாணவர் களுக்கு பலதரப்பட்ட செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன.

பாடசாலை கடல்சார் குழுக்களின் விழிப்பியலை உருவாக்குவதில், சமுத்திரத்துடன் இணைந்துள்ள சூழல் முறைமைகளின் முக்கியத்துவம், சடுதியான எண்ணெய் சிந்துதல்களின் தாக்கங்கள், அடிச்சுமை நீரின் ஊடாக பரவுகின்ற ஊடுருவுகின்ற அங்கிகள் போன்ற கருப்பொருள்கள் கலந்துரையாடப்பட்டன. பாடசாலை கடல்சார் குழுக்களுடன் இணைந்திருந்த ஆசிரியர்களுக்கு செயலமர்வு களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, கண்டல் கழிமுகங்கள் போன்ற புதுமையான சூழல் முறைமைகளுக்கு அவதானித்தல் வருகைதரல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

பாடசாலை கடல்சார் குழுக்களுக்கு 2012ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

- விழிப்பியல் செயற்றிட்டங்கள் - 182
- ஆசிரிய விழிப்பியல் செயற்றிட்டங்கள் - 05
- வெளிக்கள வருகைதரல்கள் - 03



*பாடசாலை கடல்சார் குழுக்கள் விழிப்பியல் செயற்றிட்டம்*



*சமுத்ர பானமுத்து கடல்சார் புதிர் போட்டிகள்*

ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பாடசாலை கடல்சார் குழுக்களுக்காக புதிர் போட்டியொன்று நடைபெற்றது. ஆரம்பத்தில், எழுத்திலான போட்டிச் சோதனையொன்று நடத்தப்பட்டதுடன், ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பாடசாலை கடல்சார் குழுக்கள் மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டன.

## வெற்றியீட்டியோர்

| மாவட்டம் | வெற்றியீட்டிய பாடசாலைகள் |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை வித்தியாலய |
| மாத்தறை | ராகுல வித்தியாலய, மாத்தறை |
| காலி | சங்கத்தமித்த வித்தியாலய, காலி |
| களுத்துறை | களு/ஞானோதய வித்தியாலய |
| கொழும்பு | NG/நியுஸ்டெட் பாலிகா வித்தியாலய |
| கம்பஹா | சென்ற். மோரிஸ் கல்லூரி |



*மாத்தறை மாவட்டத்தில் போட்டி*



*காலி மாவட்டப் போட்டியின் வெற்றியீட்டியோருக்கு பரிசுகளை வழங்குதல்*

## 7. கப்பல்களில் உற்பத்தி செய்யப்பட்ட கழிவுக்கு உபசரணை வசதிகளை வழங்குதல்

MARPOL 73/78இன் ஆறு பின்னிணைப்புகளில் ஐந்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடொன்றாக, கப்பல்களில் உற்பத்தி செய்யப்படும் கழிவுக்கு உபசரணை வசதிகளை வழங்குவதற்கு எமது நாடு கட்டுப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், கப்பல்களில் தோற்றுவிக்கப்படும் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க்கும், திண்மக் கழிவுக்குமான உபசரணை வசதிகளை வழங்குவதற்கான பொறுப்பானது 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் தங்கியுள்ளது. இதனால், இச் சேவைகளை வழங்குவதற்கு தகுதிபெற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு வருடமும் பதிவுசெய்யப்படுவதுடன், அதன் பின்னர் உரிய நுண்ணாய்வின் பின் கப்பலில் இருந்து கழிவு பெறப்படும் ஒவ்வொரு நேரமும் உத்தரவுப்பத்திரமொன்றை அதிகாரசபை வழங்குகின்றது. இது கடல்சார் சூழலினுள் பயன்படுத்தப்பட்ட எண்ணெயும், திண்மக் கழிவும் சேர்க்கப்படுவதைக் குறைந்தபட்சமாக்கியுள்ளது.

2012இல் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண். - 29

வழங்கப்பட்ட அனுமதிபத்திரங்களின் எண்ணிக்கை - 950

அகற்றப்பட்ட எரிக்கப்பட்ட எண்ணெயின் தொகை - 19,917$m^3$

அகற்றப்பட்ட திண்மக்கழிவின் தொகை - 4,896$m^3$

2012ஆம் ஆண்டின் போது எண்ணெய் ஏற்றுதல், நிரப்புதல் நிறுவனங்களும் பதிவுசெய்யப்பட்டன. அத்துடன் ஏழு நிறுவனங்களும் பதிவினைப் பெற்றுக் கொண்டன. இந் நிறுவனங்களின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக கண்காணிப் பதன் மூலம் எண்ணெய் ஏற்றுதல், நிரப்புதல் செயற்பாடுகளின் போது கடலுக்குள் பிரவேசிப்பதிலிருந்து எண்ணெயைக் குறைந்த பட்சமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 8. கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

சமுத்திரத்தன் வளங்களைப் பிரித்தெடுக்கும் போது விளைவிக்கப்படும் கடல்சார் தீழ்ப்பானது உலகில் உள்ள பெருமளவு நாடுகளைப் பாதிக்கும் ஒரு பிரச்சனையாகும். எனவே, இந்தத் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்காக சட்டபூர்வ நடவடிக்கைகளும், தொழில்நுட்ப மூலோபாயங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையும் பெற்றோலியம் எண்ணெய் ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளதனால், பெற்றோலியம் எண்ணெய்கள் உட்பட இயற்கையான வளங்களுக்கு கடற்கரைக்கு அப்பால் அகழ்வது தொடர்பில் ஒழுங்குவிதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம், பெற்றோலியம் எண்ணெய்களின் ஆராய்ச்சிக்கு கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொறுப்பாகும். மன்னார் வடிநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெற்றோலியம் எண்ணெய் ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் கண்டுபிடிப்புகள் மீதான அடிப்படையில், எதிரொலியைப் பயன்படுத்தி அப்பகுதியில் மூன்று பரிமாணத்திலான அளவீடொன்றை கோ்ன் லங்கா என்ற நிறுவனம் நடத்தியுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு அங்கீகாரத்தை வழங்குவதும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எண்ணெய் ஆராய்ச்சியின் கட்டம் II ஆரம்பத்தை குறிக்கும் வகையில், அதே கடல் பகுதியில் இரண்டாவது கிணறு ஒன்றைத் தோண்டுவதற்கு கோ்ன் லங்கா நடவடிக்கையை எடுத்தது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு அங்கீகாரத்தை வழங்குவதும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதும் 2012 டிசம்பரில் நடைபெற்றது.

## 9. உலக சமுத்திரங்கள் தினத்தைக் குறித்தல்

உலக சமுத்திரங்கள் தினமாக ஜுன் 8ஐ ஐக்கிய நாடுகள் பிரகடனப்படுத்தியது. உலக சமுத்திரங்கள் தினத்தைக் குறிப்பதற்காக, தேசிய வைபவத்தை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை ஒழுங்குபடுத்தியதுடன், இது ‘‘சமுத்திர வளங்கள் ஊடாக பசுமை உலகொன்றை நோக்கி’’ என்ற கருப்பொருளின் கீழ் ராஜகிரியவில் வங்கியாடல் கற்கைகள் நிலையத்தில் 2012 ஜுன் 8 அன்று நடைபெற்றது.

கடல்சார் சூழலின் பெறுமதியினதும். அதனுடன் இணைந்துள்ள வளங்களின் மீதும் அத்துடன் கடல்சார் சூழலைப் பாதுகாக்கும் வளங்களின் மீதும் அதிகரித்த விழிப்பியல் ஊடாக, மக்களின் போக்குரீதியிலான மாற்றமொன்றை உருவாக்கி, அவ்வாறாக நிைத்திருக்கத்தக்க தன்மையொன்றில் கடல்சார் வளங்களைப் பயன்படுத்தவதற்கு அவற்றை வலிமைப்படுத்துவதே உலக சமுத்திரங்கள் தினத்தை குறிப்பதற்கான பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட வைபவம் சூழல் அமைச்சர் கௌரவ அனுர பிரியதர்ஷன யாபா, மற்றும் மீன்பிடித்தொழில் நீரியல்வாழ் வளங்கள் அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன

ஆகியோரின் பங்கெடுப்புடன் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அரசாங்க முகவராண்மை களினதும், அரச சார்பற்ற தாபனங்களினதும் அலுவலர்கள், மூன்று ஆயுதப்படைகளின் அலுவலகர்கள், பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 176 பாடசாலைச் சிறுவர்கள் வைபவத்தில் பங்கெடுத்தனர்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோக பூர்வ இணையதளத்தின் அங்குரார்ப்பணத்துடனும், "சத் சமுத்ர" (7 சமுத்திரங்கள்)என்ற வளமிக்க சஞ்சிகையை ஆரம்பித்து வைத்தலுடனும் நிகழ்ச்சி இடம்பெற்றது.



*பாரம்பரிய விளக்கை கௌரவமிக்க விருந்தினர்கள் ஏற்றுகின்றனர்.*




*குழுப் பாடலொன்றை சங்கமித்த மகளிர் கல்லூரி மாணவிகள் இசைக்கின்றனர்.*

## 10. சர்வதேச கரையோரச சுத்திகரித்தல் தினம்

கடல்சார் தீழ்ப்பினைப் பாதிக்கும் 90% கொண்ட தீழ்ப்புக்களின் மூலங்கள் நிலத்திலிருந்தே தோற்றுவிக்கப்படுவதனால், நிலம் மீதான மூலங்கள் ஊடாக விளைவிக்கப்படும் கடல்சார் சூழலைக் குறைந்தபட்சமாக்குவதற்கு நடவடிக்கையை எடுப்பது கடல்சார் சூழலின் உயிர்வாழ்வுக்கு முக்கியமானதாகும். கடற்கரை யிலிருந்து சமுத்திரத்துடனும், அத்துடன் ஆறுகள், அருவிகள் போன்ற நீரோட்டங்களின் ஊடாகவும் சேர்க்கப்படும் கழிவுகள் மீது மக்களின் கவனத்தை குவியப்படுத்துவதற்கும் அத்துடன் தீழ்ப்பற்ற கடல்சார் சூழலைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மக்களைத் தூண்டுவதற்கும் சர்வதேச கரையோர சுத்திகரித்தல் தினத்தை உலகில் உள்ள பெருமளவு நாடுகள் கொண்டாடுகின்றன. ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பரில் மூன்றாவது வாரத்தினுள் இத் தினம் வருகின்றது. 2012இல் பின்வரும் அமைவிடங்களில் சர்வதேச கரையோர சுத்திகரித்தல் தினத்தை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை நடத்தியது.

செயற்பாடுகளின் போது சேகரிக்கப்பட்ட கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு, தொகைகள் மீதான தரவுகள் பதிவுசெய்யப்பட்டன. சமுத்திர பேணல் முறையினால் சர்வதேசரீதியில் தரவுகள் வெளியிடப்பட்டன.



*சர்வதேச கரையோர சுத்திகரித்தல் தின நிகழ்ச்சித்திட்டம் - 2012 கொழும்பு மாவட்டம்*



*சர்வதேச கரையோர சுத்திகரித்தல் தின நிகழ்ச்சித்திட்டம் - 2012 மாத்தறை மாவட்டம்*

| மாவட்டம் | சுத்திகரிக்கப்பட்ட அமைவிடம் | பங்கெடுப் பாளர் களின் எண். |
|---|---|---|
| கொழும்பு (பிரதான நிகழ்ச்சி) | கல்கிசை மற்றும் வெள்ளவத்தை கரையோர வலயம் | 300 |
| கம்பஹா | நீர்கொழும்பு கடற்கரை பூங்கா<br>ஜூட் வத்தை கரையோர வலயம்<br>பேயவத்தை கரையோர வலயம் | 100<br>151<br>80 |
| புத்தளம் | மத்தகொட்டுவ கரையோர வலயம்<br>பரடெல்பொல கரையோர வலயம்<br>கண்டகுளிய கரையோர வலயம் | 75<br>55<br>159 |
| களுத்துறை | கலிடோ கரையோர வலயம்<br>மொறகல்ல கரையோர வலயம் | 250<br>150 |
| காலி | தெவெட்ட கரையோர வலயம்<br>கொக்கல கடற்கரை பூங்கா | 235<br>62 |
| மாத்தறை | கிரளவெல படகு நிறுத்துமிட கடற்கரை<br>மாத்தறை இறங்குதுறை | 107<br>211 |
| ஹம்பாந் தோட்டை | கிரிந்த கடற்கரை பூங்கா<br>ஹம்பாந்தோட்டை கடற்கரைப் பூங்கா | 151<br>140 |
| திருகோண மலை | புறாத்தீவுகள், நிலாவெளி<br>திருக்கோவில் | 250<br>241 |
| மனன்னார் | தென் பீடம் | 50 |

## 11. தெயற்ற கிருள - 2012

2012ஆம் ஆண்டில், தெயற்ற கிருள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும், தேசியப் பொருட்காட்சிக்குமான இடமாக அனுராதபுரம் மாவட்டம் தெரிவுசெய்யப்பட்டது. சமுத்திரத்துடன் இது இணைந்திருக்கவில்லை என்றபோதிலும், இது வாழ்வாதாரத்தின் வழிவகைகள் கமத்தொழில் என்பதுடன், இதுவே கடல்சார் தீழ்ப்பினைப் பாதிக்கும் ஒரு பிரதான துறையாகும். எனவே, கடல்சார் தீழ்ப்பு மீது அப்பகுதியைச் சேர்ந்த மக்களின் விழிப்பியலை உயர்த்துவதற்கு இவ்வருடத்தின் தெயற்ற கிருள நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம், மூன்று தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர் களுக்கு விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

| பாடசாலை | பங்கெடுத்த மாணவர்க ளின் எண். |
|---|---|
| சித்தார்த்த மகா வித்தியாலயம் | 183 |
| தக்ஷிலா மகா வித்தியாலயம் | 60 |
| விமலஞான மகா வித்தியாலயம் | 122 |

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் போது, கடல்சார் சூழலின் முக்கியத்துவத்தையும், கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதையும் இட்டு மாணவர்கள் தெளிவுபடுத்தப்பட்டார்கள்.

தெயற்ற கிருள பொருட்காட்சியில் பொருட்காட்சிக் கூடமொன்றை அமைத்திருந்த கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை 10,000க்கு மேற்பட்ட மக்களுக்கு விழிப்பியலை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது.

# 3. நிருவாக, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் சட்டப்பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

## 3.1 நிருவாகப் பிரிவு

சேவையில் சேர்க்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து சேவையிலிருந்து நீக்கப்படும் வரையும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பணியாளர் மீதான ஆளணியினரின் முழுமையான முகாமைத்துவமும், ஏனைய பிரிவுகளின் பணியை வசதிப்படுத்துவதும் நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும். அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலகரான பொது முகாமையாளரின் பணிப்புரையின் கீழ் நிருவாகப் பிரிவு செயற்படுகின்றது.

**வகுதியின் பிரகாரம் பணியாளரின் கட்டமைப்பு**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலாற்றும் ஊழியர் கோப்பு | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பிரதம நிறைவேற்று அலுவலர் | 01 | 01 | - |
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 04 | 01 | 03 |
| நடுத்தர முகாமையாளர்கள் | 11 | 10 | 01 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 12 | 12 | - |
| வினைப்படுத்தல் அலுவலர் | 12 | 10 | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 19 | 10 | 08 |
| தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 07 | 07 | - |
| ஓரளவு தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 64 | 46 | **18** |
| தரப்படுத்தப்படாத அலுவலர்கள் | 09 | 06 | 03 |
| **மொத்தம்** | 139 | 103 | 35 |

ஆண்டின் போது, நிருவாகப் பிரிவின் விசேட செயற்பாடுகள்

1. 2012 ஒக்ரோபரில் முகாமையாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டது. இது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத் தினால் 2011 மே மாதத்தில் அங்கீகரிக்கப் பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிநிலைகளில் ஒன்றாகும்.

2. மூன்று உள்ளக ஆளணியினருக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் அவை வெற்றிடமாக வந்த போது வழங்கப்பட்டன.

3. அதிகாரசபை 16 ஆசன வேன் ஒன்றைப் பெற்றுக்கொண்டதுடன், இது திறைசேரி உதவிதொகையொன்றாகும்.

4. அதிகாரசபையின் நாளாந்த நோக்கங் களுக்காக ஒரு முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் கொள்வனவு செய்யப்பட்டன.

5. கழிவு உபசரணை அனுமதிச் சீட்டுக்களை வழங்கும் நோக்கத்திற்காக கொழும்பு துறைமுக இடப்பரப்பினுள் ஒரு புறம்பான அலுவலகம் தாபிக்கப் பட்டது.

6. அதிகாரசபையின் திறனுள்ள பணி யாளரின் வகுதியின் கீழ் வரும் சாரதிகளின் பதவிகளின் எண்ணிக்கை களை 01.01.2013இலிருந்து செயற்படத் தக்கதாக 07இலிருந்து 09க்கு அதிகரிப்ப தற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

## 3.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

பயிற்சியின் மூலம் க.சூ.பா.அதிகாரசபையின் பணியாளரின் ஆற்றலளவும், திறன் முன்னேற்றமும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும். மனித வளங்கள் அபிவிருத்திக்காக 2011இல் ஒரு புறம்பான பிரிவு அமைக்கப்பட்டது. எதிர்காலத்தில் மனித வளங்கள் அபிவிருத்திக்கான திட்டங்கள் இப்பிரிவினால் வகுத்தமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். க.சூ.பா.அதிகாரசபையின் பிரதம நிறைவேற்றுனரான பொது முகாமையாளரினால் பிரிவின் செயற்பாடுகள் வழிகாட்டப்படுகின்றன.

### பிரிவின் பொறுப்புக்கள்

1. பணியாளரின் பயிற்சித் தேவைகளை அடையாளம் காணுதல், பயிற்சியை நடத்துவதற்கு பொருத்தமான வள நபர்களையும், நிறுவனங்களையும் தெரிவு செய்தல். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், இதன் பிரகாரம் பயிற்சிக்காக பணியாளரை அனுப்பிவைத்தல்.

2. பயிற்சியைக் கண்காணிப்பதுடன், ஏதாவது குறைவுபாடுகள் இருந்தால் அவசியமான தீர்வையிலான நடவடிக்கையை எடுத்தல்.

3. பணியாளரின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை களை மதிப்பாய்தல்.

4. பணியாளரை தரப்படுத்துவதற்கான நடைமுறை யையும், பதவியேற்றத்திற்கான திட்டங் களையும் தயாரித்தல்.

5. பொது முகாமையாளரின் அங்கீகாரத்திற்குட் பட்டு பணியாளர் தொடர்பான விபரங்களையும், நிறுவனரீதியிலான செயற்பாடுகளையும் அவ்வாறு செய்யுமாறு கோரப்படும் போது நேரடி அமைச்சுக்கும் மற்றும் வேறு வெளிவாரி நிறுவனங்களுக்கும் வழங்குதல்.

6. ஊழியர்களின் சேமநலன்

### 2012ஆம் நடத்தப்பட்ட செயலமர்வுகள்

1. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் இணைந்த திட்டம் மீது அலுவலர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக செயலமர்வு 2012-2016 காலத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் பங்கெடுப்புடன் தயாரிக்கப்பட்ட அதிகார சபையின் இணைந்த திட்டம் மீது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பணியாளரைத் தெளிவுபடுத்தும் நோக்கத் திற்காக 2012 ஒக்ரோபர் 11இலும், 12இலும் இச் செயலமர்வு நடத்தப்பட்டது. இது பின்வரும் விளைவுகளைக் கொண்டுவந்தது.

- 2012-2016 இணைந்த திட்டத்திற்கு அமைவாக மாவட்ட மட்ட செயற்றிட்டங்களை முடிவுறுத்தல்

- அதிகாரசபையின் எதிர்காலப் பாதையையும், செயற்பாடுகளையும் பற்றி புரிந்துணர்வொன்றை நடைமுறை யிலான பணியாளருக்கும், புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பணியாளருக்கும் வழங்குதல்

- குறிப்பான அலுவலர்களுக்கான குறிப்பான பணிகள் தொடர்பில் பொறுப்புக்களைக் குறித்தொதுக்குதல்



**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களில் பணியாளரின் பங்கெடுப்பு தொடர்பிலான விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன**

**2012இன் போது உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு**

| தொடர் இல. | பெயர் | பதவிப் பெயர் | பயிற்சிநெறியின் தலைப்பு | காலம் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | செல்வி எ.எச்.பிரேமசந்திர<br>திரு.எ.பி.எஸ்.பண்டார | உள்ளகக் கணக்காய்வாளர்<br>முகாமைத்துவ உதவியாளர் | கணக்காய்வு மீது விழிப்பியலை எழுப்புவதற்கான இரு நாள் செயலமர்வு | 22.03.2012 – 23.03.2012 | மிலோடா நிறுவனம் |
| 02 | திரு.எல்.பி.ரைரஸ்<br>திருமதி எ.எம்.ஆர்.எ.சந்தனி<br>திருமதி டி.ஜி.எஸ்.பிரியதர்ஷிகா<br>திருமதி இ.ஐ.பெர்னாண்டோ<br>திரு.எல்.எல்.ஆர்.பீ. டி சில்வா<br>திரு.கே.சிவகுமார்<br>திருமதி பி.டி.எம்.என்.குலதிலக்க<br>திருமதி ஐ.எம்.டபிள்யு.குணசேகர<br>திருமதி பி.சமரசேகர<br>செல்வி டி.ஆர்.ஐ.இகலகம<br>திரு.தேசப்பிரிய செனிவிரத்ன<br>திரு.எ.விஜேவர்ணசூரிய<br>செல்வி ரி.கே.டி.யு.குணசேன<br>திரு.டி.ஆர்.சி.ஆர்.விஜேரத்ன | உதவி முகாமையாளர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர் | விசேடமாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தயாரிப்பதற்காக GISஇன் பயன்பாடு மீதான செயலமர்வு | 19.03.2012 – 24.03.2012 | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 03 | செல்வி டபிள்யு.எச்.எ.எஸ்.கே. ஹிட்டிபண்டார | உதவி முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி) | நிருவாகச் சட்டமும், மனித வளங்கள் அபிவிருத்தியும் | 24.03.2012 | நிருமாண, பயிற்சி அபிவிருத்தி நிறுவனம் |
| 04 | செல்வி டபிள்யு.எச்.எ.எஸ்.கே. ஹிட்டிபண்டார<br>திருமதி ஜி.பி.நிலாஞ்ஜனி | உதவி முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)<br>நிருவாக அலுவலர் | ஒழுக்காற்று நடைமுறை | 16.05.2012 – 18.05.2012 | தேசிய தொழில் ஆய்வுகள் நிறுவனம் |
| 05 | திருமதி டி.எம்.ஐ.பி.கருணாரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | ஆங்கிலத்தில் தொடர்பாடல் திறன்களில் டிப்ளோமா | 10.05.2012 (15 மாதங்கள்) | மிலோடா நிறுவனம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | திரு.எச்.ரி.என்.பியதாச<br>திருமதி ரி.எஸ்.ரணசிங்க<br>திருமதி ஆர்.பி.ரணவீர<br>திரு.டி.சி.ஆர்.ஜயவர்தன<br>திருமதி எச்.ஆர்.டி.சுபாஷினி<br>திரு.ரி.சிறீபதி<br>திரு.எம்.ரி.கே.டெல்பசித்ரா<br>திரு.எஸ்.எல்.விக்ரமசிங்க<br>திரு.டபிள்யு.ஐ.எச்.கே.விஜேரத்ன<br>திரு.எ.ஜி.எ.எல்.குமார<br>திரு.எஸ்.பி.எஸ்.குணதிலக<br>செல்வி ஜே.என்.விஜேசிங்க | உதவி முகாமையாளர்<br>உதவி முகாமையாளர்<br>உதவி முகாமையாளர்<br>கணக்காளர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர் | விசேடமாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தயாரிப்பதற்காக GISஇன் பயன்பாடு மீதான செயலமர்வு | 23.04.2012 – 28.04.2012 | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 07 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி) | தலைவர் | அரசாங்க நிறுவனங்கள் தொடர்பில் கணக்காய்வு விசாரணைகளை எவ்வாறு குறைந்தபட்சமாக்குவது என்பது மீதான குழாம் கலந்துரையாடல் | 16.08.2012 | இலங்கை மன்றக் கல்லூரி |
| 08 | எஸ்.எம்.சி.குமாரகே<br>எஸ்.கே.ஹிட்டிபண்டார<br>எ.எச்.பிறேமசந்திர<br>பி.சமரசேகர<br>ஐ.எம்.டபிள்யு.குணசேகர<br>எல்.எல்.ஆர்.பீ. டி சில்வா<br>எஸ்.எல்.விக்ரமசிங்க<br>ரி.கே.டி.யு.குணசேன<br>டபிள்யு.ஐ.எச்.கே.விஜேரத்ன<br>ஜே.என்.விஜேசிங்க | உதவி முகாமையாளர் (நிரு.)<br>உதவி முகாமையாளர் (ம.வ.அ.)<br>உள்ளகக் கணக்காய்வாளர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர்<br>கடல்சார் சூழல் உதவியாளர் | நிறுவனரீதியிலான முன்னேற்றத்திற்கு பணியாளர் பங்களிப்பினை மேம்படுத்துவது மீதான செயலமர்வு | 16.08.2012 – 17.08.2012 | இலங்கை மன்றக் கல்லூரி |
| 9 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி) | தலைவர் | நல்லாட்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி மீதான கருத்தரங்கு | 25.09.2012 – 26.09.2012 | இலங்கை மன்றக் கல்லூரி |
| 10 | செல்வி அஸ்வினி காரியவாசம் | சட்ட அலுவலர் | அரசாங்க நிறுவனங்களில் சட்ட அலுவல்களின் முகாமைத்துவம் மீதான செயலமர்வு | 06.11.2012 – 08.11.2012 | இலங்கை மன்றக் கல்லூரி |
| 11 | ஐ.எம்.டபிள்யு.குணசேகர<br>எல்.எல்.ஆர்.பீ. டி சில்வா<br>டபிள்யு.ஐ.எச்.கே.விஜேரத்ன | கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் அலுவலர்<br>கடல்சார் சூழல் உதவியாளர் | கடல்சார் சூழலில் இசுத்தோப்புக்கள் மற்றும் உயிர்புவிஇரசாயன மாற்றத்தின் பிரயோகம் மீதான பயிற்சிநெறி | 21.11.2012 – 30.11.2012 | |

## 2012இன் போது வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு

| தொடர் இல. | பெயர் | பதவிப் பெயர் | பயிற்சிநெறியின் தலைப்பு | காலம் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி) | தலைவர் | நிலத்தை தளமாகக் கொண்ட கடல்சார் சூழலின் பாதுகாப்புக்கான உலகளாவிய செயற்றிட்டத்தின் 3ஆவது அரசாங்கங்களுக்கிடையிலான மதிப்பாய்வுக் கூட்டம் - மணிலா | 21.01.2012 – 28.01.2012 | பிலிப்பைன்ஸ் |
| 02 | செல்வி அஸ்வினி காரியவாசம்<br>திருமதி ஆர்.பி.ரணவீர | சட்ட அலுவலர்<br>உதவி முகாமையாளர் (தென் மாகாணம்) | கடல்பற்று துறையில் பெண் முகாமையாளர்களுக்கு பசுமை கப்பற்றுறையை ஆதரித்து வாதாடுதல் மீதான பிராந்திய செயலமர்வு - ஆசியா | 06.02.2012 – 09.02.2012 | பிலிப்பைன்ஸ் |
| 03 | திரு.ஆர்.நீல் பிரியதர்ஷன | உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடு) | புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு தர முகாமைத்துவ முறையின் பயன்பாடு மீதான IAEA/RCA பிராந்திய பயிற்சிநெறி | 16.04.2012 – 20.04.2012 | கொரியா |
| 04 | திரு.எ.ஜே.எம்.குணசேகர | உதவி முகாமையாளர் (செயற்பாடுகள்) | லண்டன் வரைவுடன்படிக்கை மீதான IMO/MLTM ஆசிய பசுபிக் பிராந்திய செயலமர்வுக்கான அழைப்பு | 14.05.2012 – 25.05.2012 | கொரியா |
| 05 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும<br>திரு.எ.ஜே.எம்.குணசேகர<br>திரு.எச்.ரி.என்.ஐ.பியதாச | தலைவர்<br>முகாமையாளர் (செயற்பாடுகள்)<br>உதவி முகாமையாளர் (மாகாணம்) | தென் ஆசிய பிராந்திய அடிச்சுமை நீர் முகாமைத்துவ மூலோபாய அபிவிருத்திக் கூட்டம் | 2011.08.08 – 29.05.2012 30.05.2012 | இந்தியா |
| 06 | செல்வி ஜி.டி.சுமுது பிரியதர்ஷிக | மாவட்ட கடல்சார் சூழல் அலுவலர் | 2012 ஜூனில் வங்காள விரிகுடா பாரிய கடல்சார் சூழல் முறைமைக் கருத்திட்டம் மற்றும் சோதனைக் கூட்டம் | 06.06.2012 – 07.06.2012 | தாய்லாந்து |
| 07 | திருமதி தலதா ரணசிங்க | உதவி முகாமையாளர் (மேற்கு/வ.மே. மாகாணங்கள்) | கண்டல் தாவர புனருத்தாரனம் மீதான பிராந்திய கருத்தரங்கு, சென்னை, இந்தியா. இலங்கையில் கண்டல் தாவர புனருத்தாபன முயற்சிகள் | 28.08.2012 – 02.09.2012 | சென்னை, இந்தியா |

## 3.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தலைவரின் நேரடியான மேற்பார்வையினதும், வழிகாட்டலினதும் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குகின்றது. அதிகார சபையின் நிதிசார், செயற்பாட்டு, நிருவாக மற்றும் சட்டப் பிரிவுகளின் பணியை அவதானிப்பதும், தீர்மானமொன்றுக்கு தலைவருக்கு தமது கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பிப்பதுமே பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

கணக்காய்வுப் பிரிவின் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- அதிகாரசபையின் நிதிசார் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை மதிப்பாய்தல்.

- நிதிசார் மற்றும் தொழிற்பாட்டிலான செயற்பாடுகளை மதிப்பாய்தல் - தொடர் பான நடைமுறைகளை மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல். மதிப்பீடொன்றுக்கு நடைமுறை உட்பட்டதென்பதுடன், சம்பந்தப் பட்ட தகவல் அறிக்கயிைடப்படுகின்றது அவசியப்படுமிடத்து விரிவான விசாரணை களை நடாத்தி முக்கியமானவை என கருதப் படும் விசேட அம்சங்களினதும், நிகழ்வுகளினதும் மீது அறிக்கையிடல்.

- நிதிசார்ரீதியில் அவசியமற்ற நிதிசார் கட்டுப்பாடுகளினதும், கட்டுப்பாட்டின் வேறு அம்சங்களினதும் பொருளாதார உற்பத்தித் திறனையும், செயற்றிறனையும் விசாரித்தல்.

- அரசாங்க விதிகளினதும், ஒழுங்கு விதிகளினதும் மற்றும் அதிகாரசபையின் விதிகளினதும், ஒழுங்குவிதிகளினதும் இணக்கத்தன்மையைப் பரீட்சித்தல்.

- முகாமைத்துவத்தின் தேவைகளைப் பொறுத்து அவசரகால சூழ்நிலைகள் மீது விசேட விசாரணைகளை நடத்துதல்.

இதனால், உள்ளகக் கணக்காய்வின் வருடாந்தத் திட்டம் மீதான அடிப்படையில் ஆண்டின் போது அதிகாரசபையின் சகல பிரிவுகளும் மற்றும் மாகாண அலுவலகங்களும் கணக்காய்வு செய்யப்பட்டதுடன், கணக்காய்வு மீதான மாதாந்த அறிக்கைகள் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

2012இன் போது கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் நான்கு கூட்டங்கள் நடைபெற்றதுடன், இக்கூட்டங்கள் மீதான அறிக்கைகள் பொருத்தமான நடவடிக்கைக்காக தலைவருக்கும், பொது முகாமையாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

## 3.4 சட்டப் பிரிவு

சட்டப் பிரிவினால் க.சூ.பா.அதிகாரசபையின் சட்ட நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன. 2011இன் போது பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட பணி கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது:

1. இந்த அதிகாரசபையின் சட்டப் பிரிவானது 2012 ஜனவரி 19இன் இல.1741/19 அரசாங்க வர்த்தமானியில் 2011இன் இல.02 எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் (கடல்சார் சூழல் பாதுகாப்பு) ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதிகளை வெளியிட்டுள்ளது. இதன் பிரகாரம், இந்த ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வந்த திகதியில் உள்ளவாறு, எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் நடத்திக் கொண்டிருந்த யாரேனும் நபர் அத்தகைய திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அத்தகைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் அனுமதிப்பத்திர மொன்றைக் கொண்டிருக்க வேண்டும்.

   *இந்த ஒழுங்குவிதி செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று யாரேனும் நபர் இந்த ஒழுங்கு விதிகளுக்கான அட்டவணை Iஇல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரசபைக்கு விண்ணப்பமொன்றை அத்தகைய திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் எண்ணெய்* நிரப்புதல், *இறக்குதல் செயற்பாடொன்றை மேற்கொள் கின்றார் என்றால்:*

   *''இந்த ஒருங்குவிதிகளுக்கான அட்டவணை IIIஇல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரசபைக்கு அதன் சார்பாக செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் (இதனகத்துப் பின்னர் ''அதிகாரசபை'' எனக் குறிப்பிடப்படும்) அதன் சார்பாக வழங்கப்பட்ட செல்லுபடியான எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் இலங்கையின் ஆள்புல நீரோட்டங்களில் அல்லது ஏதேனும் வேறு கடல்பற்று வலயத்தில், அதன் foreshoreஇல் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தில் எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் செயற்பாடொன்றை இந்த ஒழுங்குவிதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதி யிலிருந்து நபர் எவரேனும் மேற்கொள்ளக்கூடாது''*

2. அத்துடன் 2012இல் இல.01 எண்ணெய் சிந்துதல் அவசர கால திட்டம் மீதான ஒழுங்குவிதிகள் 2012 ஜூலை 30இலிருந்து செயற்படத்தக்கதாக 2012 ஜனவரி 19 திகதியிடப்பட்ட இல.1741/19

அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம்:

*''துறைமுகங்கள், இறங்குதுறை முடிவிடங்கள், கப்பல்களின் பழுதுபார்த்தல் யார்ட்சாலைகள், கடற்கரைக்கு அப்பாலான நிறுவுகைகள், இலங்கையின், மற்றும் 1076இன் இல.22, கடல்பற்று வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஏதேனும் கடல்பற்று வலயத்தின்'' ஆள்புல நீரோட்டங்களில் கப்பல்களுக்கும், கப்பல்களிலி ருந்தும் எண்ணெயை இடமாற்றுவதற்காகப் பயன்படும் ஏதேனும் வேறு சாதனங்கள் ஆகியவற்றுக்கு பொறுப்பில் உள்ள ஒவ்வொரு உரிமையாளர், இயக்குனர், தலைவர் அல்லது அவர்களது முகவர்கள் அல்லது யாரேனும் வேறு நபர் ஆகியோருக்கு இந்த ஒழுங்குவிதிகள் பிரயோகிக்கப்படும்''*

இந்த ஒழுங்குவிதிகள் அதிகாரசபைக்கு வருமானத் தோற்றுவிப்பின் மூலங்கள் என்பதுடன், இவ்விரு ஒழுங்குவிதிகளுக்கும் பங்காளர்களுக்கான விழிப்பியல் செயற்றிட்ட மொன்று 2012 டிசம்பரில் நடத்தப்பட்டது.

3. பாணந்துறை வெளி இறங்குதுறையில் நங்கூரமிட்டிருந்த “M.V. THERMOPYLAE SIERRA” என்ற கிரேக்க கொடியிலான கப்பலொன்றிலிருந்து 2012 ஓகஸ்ட் 23இன் கடல்சார் தீழ்ப்பு சம்பவத்திற்காக கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 26இன் (குற்றவியல் பொறுப்பு) கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்துடனான கூட்டு முயற்சியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. கடல்சார் சூழல் பாதுகாப்பு தொடர்பில் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் (குற்றவியல் பொறுப்பு) “M.T.CHAHAT” என்ற பெயரிலான கப்பலொன்றிலிருந்து 2010 நொவம்பர் 30இன் கடல்சார் தீழ்ப்பு சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடனான கூட்டுமுயற்சியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன (முறைப்பாடு இல. B 5984/06/2011)

5. 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச்சட்டத்திற்கு அவசியமான மேலதிகத் திருத்தங்களைக் கரிசனைக்கெடுத்து, சம்பந்தப் பட்ட பகுதிகளுடனான மேலதிக கலந்துரை யாடலுக்கு உட்பட்டு திருத்தங்களுக்கான பெருமளவு முன்மொழிவுகள் சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6. கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 51இன் கீழ் அவசியப்படுத்தப்பட்ட மூன்று ஒழுங்குவிதிகள் ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள எட்டின் வரைவுகள் சட்ட வரைஞருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ''கடலில் கொட்டுதலுக்கு அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல்'' மீதான கடல்சார் சூழல் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை 'கசட்'படுத்துவதன் முக்கிய த்துவத்தையும், அவரசத்தையும் கருத்திற் கெடுத்து, சட்ட வரைஞருடன் கலந்துரையாடி, 2014ஆம் ஆண்டின் 01ஆவது காலாண்டில் அவற்றை 'கசட்'படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையொன்றின் மீது நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

## 3.5 நிதிப் பிரிவு

க.சூ.பா.அ.சபையின் நிதிசார் முகாமைத்துவத்திற்கு நிதிப் பிரிவு பொறுப்பானதாகும். க.சூ.பா.அ.சபையின் சகல பொருளாதார மற்றும் நிதிசார் செயற்பாடுகளுக்கு நிதிசார் வளங்களையும், மற்றும் நோக்கங்களைப் பின்துரந்து செல்வதற்கு நிதிசார் வளங்களின் ஒதுக்கீட்டினையும் ஒதுக்கீடு செய்தல் இப்பிரிவினால் கையாளப்படுகின்றது. மிகவும் செயற்றிறனானதும், பயனுறுதிவாய்ந்ததுமான சாத்தியமான தன்மையில் நிதிசார் சேவைகளை வழங்குதல், தொடர்பான விடயங்களில் பணியாளரை வழிகாட்டுதல், நிதிசார் செயற்பாடு களின் ஒழுங்கிணைப்பினதும், கண்காணிப்பினதும் ஊடாக அதிகாரசபையின் நிதிசார் வளங்களைக் கட்டுப்படுத்துல் ஆகியன பிரிவின் அடிப்படை நோக்கங்களாகும்.

**செயற்பாடுகள்**

1. வருடாந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பிடுகளைத் தயாரித்தல்.
2. நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல்.
3. நிதிசார் கூற்றுக்களினதும், மாதாந்த வரவு-செலவுத் திட்டங்களினதும் மீதான அறிக்கை களை வழங்குதல்.
4. சம்பளங்களினதும், படிகளினதும் கொடுப்பனவு களையும், அவற்றின் பதிவேடுகளையும் வைத்திருத்தல்.
5. சகல கருத்திட்டங்களின் கணக்குகளை வைத்திருத்தல்.
6. சகல கொடுப்பனவுகளையும் கையாள்தல்.
7. கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் கணக்குகளைப் பராமரித்தல்.
8. வங்கிகளுடன் ஒருங்கிணைப்பு.
9. கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக் களத்துடன் ஒருங்கிணைப்பு.
10. முதலீடுகளினதும் மற்றும் வேறு செயற்பாடு களினதும் முகாமைத்துவம்.

## ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்ட விசேட செயற்பாடுகள்

1. ஒரு நாள் வைப்புக்களில் உள்ள நடைமுறைக் கணக்கின் கிட்டுகின்ற மீதிகளை மூலதனமிடுவதில் ரூபா 475,024.44 கொண்ட வட்டி வருமானமொன்றை ஈட்டுவதில் அதிகாரசபை வெற்றியடைந்தது.

2. 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் கீழ், புறம்பான நிதியமொன்றை அதிகாரசபை தாபிக்க வேண்டும். இதனால், 2012ஆம் ஆண்டில் அதிகார சபையினால் அபராதங்களாக ஈட்டப்பட்ட ரூபா 10 மில்லியன் கொண்ட தொகையானது அத்தகைய கணக்குக்கு கைமாற்றப்படும் வரை 2012ஆம் ஆண்டில் திறைசேரி உடனுண்டியல்களில் மூலதனமிடப் பட்டதுடன், 31.12.2012இல் உள்ளவாறு வருமான நிதியத்தின் மீதியும் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| மூலதன பெறுமதி (ரூபா) | வட்டி (ரூபா) | 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறு மொத்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 10,709,913.55 | 1,045,612.19 | 11,555,525.00 |

3. அதிகாரசபையின் வேண்டுகோளின் மீது ஆண்டின் போது திறைசேரி உதவுதொகை யொன்றாக 'வேன்' ஒன்று கிடைத்தது. முச்சக்கரவண்டியொன்றையும், மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. இவை நிதிப் பிரிவுக்கு விசேட சிறப்பாகும்.

## 4. வருமானம்

2011ஆம் ஆண்டுக்கு எதிராக அதிகாரசபையின் வருமானத்தின் 2012ஆம் ஆண்டில் அனுபவிக்கப்பட்ட அதிகரிப்பு பிரதானமாக பின்வருவனவற்றின் காரணமாகும்:


1. அனுமதிச் சீட்டுக்களின் வழங்கலுக்கான கட்டணங்களின் அதிகரிப்பு ரூபா 4,000இலிருந்து ரூபா 5,000க்கு அதிகரிக்கப்பட்டது.

2. எண்ணெய் ஆராய்ச்சிக்கு சூழல் மதிப்பீட்டு அனுமதிச்சீட்டுக்களின் வழங்கல்.

3. எண்ணெய் ஏற்றி இறக்குதல் சேவைகளை வழங்கும் தாபனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களின் வழங்கலை ஆரம்பித்தல்.

4. கழிவுப் பதார்த்த வரவேற்பு சேவையைக் கோருகின்ற கப்பல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.

### 2007 முதல் 2012 வரை அதிகார சபையின் வருமானத்தில் அதிகரிப்பு



### 3.5.6 நிதிசார் முன்னேற்ற அறிக்கை – ஆண்டு 2012 – மீளவரும் செலவினம்

| நோக்க குறியீடு | வகுதி/நோக்கத் தலைப்பு | ஒதுக்கீடு 2012 | 31 டிசம்பர் 2012 வரை செலவினம் | 31 டிசம்பர் 2012இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **மீளவரும் செலவினம்** | | | |
| 1001 | சம்பளங்கள், ஊதியங்கள் | 36,472,000.00 | 36,363,226.78 | 108,773.22 |
| 1002 | மேலதிக நேரவேலை/ விடுமுறைக் கொடுப்பனவு | 1,574,440.00 | 613,678.21 | 960,761.79 |
| 1003 | வேறு படிகள் | 1,324,000.00 | 1,217,500.00 | 106,500.00 |
| | **உப மொத்தம்** | **39,370,440.00** | **38,194,404.99** | **1,176,035.01** |
| 1101 | உள்நாடு | 2,621,560.00 | 1,440,485.07 | 1,181,074.93 |
| 1102 | வெளிநாடு | 1,200,000.00 | 310,350.25 | 889,649.75 |
| | **உப மொத்தம்** | **3,821,560.00** | **1,750,835.32** | **2,070,724.68** |
| 1201 | காகிதாதி, அலுவலக தேவைகள் | 965,000.00 | 972,732.12 | (7,732.12) |
| 1202 | எரிபொருள், உராய்வு நீக்கிகள் | 1,743,000.00 | 1,329,504.06 | 413,495.94 |
| 1205 | வேறு | 300,000.00 | 56,235.12 | 243,764.88 |
| | **உப மொத்தம்** | **3,008,000.00** | **2,358,471.30** | **649,528.70** |
| 1301 | வாகனங்கள் | 1,775,000.00 | 1,638,858.16 | 136,141.84 |
| 1302 | பொறி இயந்திராதி, உபகரணங்கள் | 650,000.00 | 592,028.34 | 57,971.66 |
| 1303 | கட்டிடம், கட்டமைப்புக்கள் | 250,000.00 | 35,469.00 | 214,531.00 |
| | **உப மொத்தம்** | **2,675,000.00** | **2,266,355.50** | **408,644.50** |
| | போக்குவரத்து | 400,000.00 | - | 400,000.00 |
| 1402 | தபால், தொலைதொடர்பு | 2,180,000.00 | 923,152.72 | 1,256,847.28 |
| 1403 | மின்சாரம், நீர் | 2,109,000.00 | 1,726,398.60 | 382,601.40 |
| 1404 | வாடகை, சோலைவரிகள், வரிகள் | 8,000,000.00 | 6,486,930.00 | 1,513,070.00 |
| 1405 | வேறு | 2,600,000.00 | 2,173,124.35 | 426,875.65 |
| | **உப மொத்தம்** | **15,289,000.00** | **11,309,605.67** | **3,979,394.33** |
| | **மொத்த மீளவரும் செலவினம்** | **64,164,000.00** | **55,879,672.78** | **8,284,327.2** |

## நிதிசார் முன்னேற்ற அறிக்கை – ஆண்டு 2012 –மூலதனச் செலவினம்

| நோக்க குறியீடு | வகுதி/நோக்கத் தலைப்பு | ஒதுக்கீடு 2012 | 31 டிசம்பர் 2012 வரை செலவினம் | 31 டிசம்பர் 2012இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **புனரமைப்பு, மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல்** | | | |
| 2001 | கட்டிடம், கட்டமைப்புக்கள் | 500,000.00 | 299,632.50 | 200,367.50 |
| 2002 | பொறி இயந்திராதி, உபகரணங்கள் | 500,000.00 | 126,659.26 | 373,340.74 |
| 2003 | வாகனங்கள் | 750,000.00 | 41,850.00 | 708,150.00 |
| | **உப மொத்தம்** | **1,750,000.00** | **468,141.76** | **1,281,858.24** |
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, மேம்படுத்தல்** | | | |
| 2101 | வாகனங்கள் | **600,000.00** | **10,234,020.00** | **(9,634,020.00)** |
| 2102 | மரத்தளபாடங்கள், உபகரணங்கள் | 1,800,000.00 | 1,683,132.02 | 116,867.98 |
| 2103 | இயந்திராதி, உபகரணம் | 1,800,000.00 | 264,000"00 | 1,536,000.00 |
| | **உப மொத்தம்** | **4,200,000.00** | **12,181,152.02** | **(7,981,152.02)** |
| **2502** | **வேறு மூலதனம்** | | | |
| | 1. ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் - NOSCOP | 5,140,000.00 | 2,461,559.51 | 2,678,440.49 |
| | 2. ஒழுங்கு விதிகளுக்கும், சர்வதேச சமவாயத்திற்கும் தொடர்பான விடயங்கள் | 1,260,000.00 | 274,748.00 | 985,252.00 |
| | 3. பாடசாலை கடல்சார் குழுச் செயற்றிட்டங்கள் (ஹரித்த லங்கா) | 2,100,000.00 | 1,709,343.10 | 390,656.90 |
| | 4. பொது மக்களுக்கு விழிப்பியல் திட்டங்கள் | 4,150,000.00 | 3,503,583.46 | 646,416.54 |
| | 5. சொந்துரு சௌர திட்டம் | 3,150,000.00 | 1,955,748.16 | 1,194,251.84 |
| | 6. சிறிய ஆய்வுகூடத்தை விருத்திசெய்தல் | 1,700,000.00 | 1,470,829.85 | 229,170.15 |
| | 7. கூருணர்வு கடல்சார் பகுதி பாதுகாப்பு கருத்திட்டம் | 2,000,000.00 | 615,764.24 | 1,384,235.76 |
| | 8. மேம்படுத்தல்/வலியுறுத்தல் கழிவு உரசரணை வசதி | 2,400,000.00 | 256,428.67 | 2,143,571.33 |
| | 9. பிரச்சாரம் மறறும் மேம்படுத்தல் செயற்றிட்டம் | 4,000,000.00 | 1,472,102.92 | 2,527,897.08 |
| | 10. தேசிய முன்னுரிமைக் கருத்திட்டம் | 1,200,000.00 | 500,823.56 | 699,176.44 |
| | 11. கடற்கரைக்கு அப்பாலான ஆராய்ச்சியைக் கண்காணித்தல் | 600,000.00 | 18,332.65 | 581,667.35 |
| | 12. மனித வள அபிவிருத்தி | 2,750,000.00 | 1,387,283.50 | 1,362,716.50 |
| | **மொத்தம்** | **30,450,000.00** | **15,626,547.62** | **14,823,452.38** |
| | **குறைநிரப்பு ஒதுக்கீடு (பாணந்துறையில் எண்ணெய் சிந்துதல் சம்பவம்)** | **10,000,000.00** | **11,551,933.06** | **(1,551,933.06)** |
| | **மொத்த மூலதனச் செலவினம்** | **40,450,000.00** | **27,178,480.68** | **13,271,519.32** |
| | **மொத்த மூலதன மற்றும் மீளவரும் செலவினம்** | **104,614,000.00** | **83,058,153.46** | **21,555,846.54** |

குறிப்பு - பொது திறைசேரியிலிருந்து கிட்டிய ரூபா 9.6 மில்லியன் வாகன உதவுதொகையை மூலதன சொத்துக்களின் கையடக்கம் உள்ளடக்குகின்றது

## 4. கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிசார் கூற்றுக்கள் மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### கணக்கீட்டுக் கொள்கைகள் 2012

### 4.1 கூட்டாண்மைத் தகவல்

2008இன் இல.35, கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது. தலைமையலுவலகம் இல.758, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09இல் அமைந்துள்ளது.

### 4.1.2 பிரதான பணிகளும், செயற்பாடு களின் தன்மையும்

ஒழுங்குவிதிகளின் பயனுறுதிவாய்ந்த வினைப்படுத்தலின் ஊடாக இலங்கையின் ஆள்புல நீரோட்டங்களில் கடல்சார் தீழ்ப்பினைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தல், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களின் ஏற்பாடுகளின் அமுலாக்கம், தற்போதைக்கும், எதிர் காலத்திற்கும் கடல்சார் சூழலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்காக பங்காளரையும், ஏனைய வளங்களையும் ஒருங்கிணைத்தல் மற்றம் ஒன்றுதிரட்டுதல் ஆகியனவே கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான செயற்பாடு களாகும்.

### 4.1.3 பொது கணக்கிடல் கொள்கைகள்

### 4.1.3.1 நிதிசார் அறிக்கைகளின் தயாரிப்பின் அடிப்படை

நிதிசார் நிலையின் கூற்று, நிதிசார் செயற்றிறனின் கூற்று, நிகர சொத்துக்கள்/ ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று, பணப்புழக்கக் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிதிசார் கூற்றுக்கள் கொண்டுள்ளன. இக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமம் மற்றும் அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் ஆகியவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தக்கதாக SLPSAS ஊடாக, அதன் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் 2010ஆம் ஆண்டிலிருந்து செயற்படத்தக்கதாக இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை பயன்படுத்துகிறது.

நிதிசார் கூற்றுக்கள் SLPSAS 01இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுவதுடன், SLPSAS கிட்டாதவிடத்து, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்காக பிரயோகிக்கப்படுகின்றது.

4.1.3.2 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு தத்துவங்களுடன் வரலாற்றுரீதியிலான ஆகுசெலவு அடிப்படையொன்றின் மீது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

4.1.3.3 கணக்குகளைப் பாதிக்கும் பணவீக்க த்திலான காரணிகளுக்காக சீராக்கல்கள் செய்யப்படவில்லை.

4.1.3.4 திரண்ட அடிப்படையின் மீது வருமானமும், செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது.

4.1.3.5 முன்னைய நிகழ்வுகளின் விளைவொன்றாக தற்போதைய கடப்பாடொன்றுக்கு இருக்கும் போது ஐந்தொகையில் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுகையில், பொருளாதார நன்மைகளை சூழவுள்ள வளங்களின் செலவீடொன்றின் இணக்கம் விளையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4.1.3.6 நிதிசார் கூற்றின் திகதியில் கடன் வழங்குனர்களின் கோரிக்கையில் கொடுப்ப னவுக்குரிய கடப்பாடுகளும், அத்தகைய திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுக்குரிய பொறுப்புக்களும் நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறைசாரா பொறுப்புக்களாக கருதப்படுகிறது.

4.1.3.7 கடன்வழங்குனர்களின் கோரிக்கையில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு ஆண்டுக்கு மேலாக கொடுப்பனவு செய்யப்படாத கடப்பாடுகள் நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறைசாராப் பொறுப்புக்களாகக் கருதப்படுகின்றன.

4.1.3.8 முன்னைய நிகழ்வொன்றின் விளை வொன்றாக கடப்பாடு இடம்பெற்றால் ஏற்பாடு அங்கீகரிக்கப்படுவதுடன், இது நம்பகமாக மதிப்பிடப்பட முடியும் என்பதுடன், கடப்பாட்டினை இணக்குவதற்கு பொருளாதார நன்மையின் செலவீடொன்று அவசியமாகும் என்பது நிகழத்தக்கதாகும்.

### 4.1.3 ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்

4.1.3.1 அவற்றின் ஆகுசெலவில் ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

4.1.3.2 அவற்றின் பயனுள்ள ஆயுளின் மேலாக அவற்றின் ஆகுசெலவைப் பெறுமதியழிப் பதற்காக நேர் கோட்டு அடிப்படை மீது அவை மதிப்பிறக்கப்பட்டுள்ளன. அவற்றை மதிப்பிறக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட வீதங்கள் வருமாறு:

| சொத்துக்கள் | மதிப்பிறக்க வீதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணனிகள் மற்றும் தொடர்பான உபகரணங்கள் | 15% |
| வேறு அலுவலக உபகரணங்கள் | 15% |
| தொலைபேசி | 15 % |
| நடமாடும் தொலைபேசிகள் | 10 % |
| முரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| ஆய்வுகூட சாதனங்கள் மற்றும் வேறு தொழில்நுட்ப உபகரணங்கள் | 10% |
| வேறு உபகரணங்கள் | 15% |

4.1.3.3 அதன் உத்தேசமான பயன்பாட்டுக்காக சொத்துக்களின் மதிப்பிறக்கம் ஆரம்பமாகும் போது கிட்டுவதுடன், அவற்றின் பயனுள்ள ஆயுளுக்கு மேலாக நேர் கோட்டு அடிப்படை மீது மதிப்பிறக்கப்படுகின்றது.

### 4.1.4 வருமானம்

இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவுதொகைகளே அதிகாரசபையின் பிரதான வருமானமாகும். மேலதிகமாக, பின்வருவனவற்றின் மூலம் அதிகார சபையினால் தோற்றுவிக்கப்படும் சிறிய தொழிற்பாட்டிலான வருமானமுள்ளது.

1. கழிவு உபசரணை சேவையை வழங்குதல்
2. கனிப்பொருள் எண்ணெய் ஆராய்ச்சி க்கான அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல்
3. எண்ணெய் ஏற்றுதலுக்கும், இறக்கு தலுக்கும் அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல் மற்றும்
4. எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டங்களை அங்கீகரித்தல்

### 4.1.4.1 அதிகாரசபையினால் தோற்றுவிக்க ப்பட்ட வருமானம்

அதிகாரசபையினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் திரண்ட அடிப்படையின் மீது கணக்கிடப்படுகின்றது.

### 4.1.4.2 இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவுதொகைகள்

மூலதனம் மற்றும் மீளவரும் என இரு வகைகளைக் கொண்ட உதவு தொகை களை அதிகாரசபை பெறுகின்றது. இந்த உதவுதொகைகளைக் கணக்கிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கையானது பின்வருமாறு SLAS 24இன் மீதான அடிப்படையிலானதாகும்.

### 4.1.4.3 மூலதன உதவுதொகைகள்

4.1.4.4 ஆதனம், பொறி மற்றும் சாதனம் ஆகியவற்றின் கையடக்கம் அல்லது நிருமாணம் ஆகியவற்றுக்கு கிடைத்த அரசாங்க உதவுதொகைகள் அத்தகைய ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் சாதனத்தினதும் பயனுள்ள ஆயுளைக் கொண்ட காலத்தின் மேலாக வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

4.1.4.5 இலங்கையின் கடல்சார் தீழ்ப்பினை தடுப்பது தொடர்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன உதவுதொகைகள் இயற்கையாகவே உருப்படியான சொத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. எனினும், உருப்படியற்ற சொத்துக்கள் தரங்களில் (SLAS 37) முன்வைக்கப் பட்டுள்ள அங்கீகார மூலப்பிரமாணத்தை அது நிறைவேற்றுவதில்லை என்பதுடன், எனவே கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் செயற்பாடுகள் தொடர்பில் செலவினத் திற்கான உதவு தொகைகள் அத்தகைய

செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்படு கின்றன.

#### 4.1.4.6 மீளவரும் உதவுதொகைகள்

மீளவரும் உதவுதொகைகள் அதே வருடத்தில் ஏற்பட்டுள்ளதனால், அவை கிட்டிய ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## 5. ஊழியர் நன்மைகள்

### 5.1 கட்டாயமான பங்களிப்புத் திட்டம்

ஏற்பட்டவாறாக வருமானக் கூற்றில் செலவினமொன்றாக கட்டாயமான பங்களிப்புத் திட்டத்திற்கான கடப்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஊழியர்களின் மொத்த ஊதியங்களில் 15%ஐயும், மற்றும் 3%ஐயும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் க.சூ.பா.அ.ச. பங்களிக் கின்றது.

### 5.2 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்ட மொன்றே பணிக்கொடையாகும். சம்பந்தப் பட்ட நியதியின் பிரகாரம் பணிக்கொடை யைக் கொடுப்பனவு செய்வதற்கு க.சூ.பா.அ.ச. பாத்திரவாளியாகும். இப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக, முதலாவது வருட சேவையிலிருந்து ஒவ்வொரு வருடத்தையும் முடித்துக் கொண்ட சகல ஊழியர்களின் நிதிசார் ஆண்டின் கடைசி மாதத்தின் அரைவாசி சம்பளமொன்றின் அடிப்படையில் கணக்கிடப்படும் தொகையொன்றுக்கு சமமாக ஐந்தொகையில் ஏற்பாடொன்று முன்காவிச் செல்லப்படும். 1983இன் இல.12 பணிக்கொடையின் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் கீழ் கொடுப்பனவுக்குரிய பணிக்கொடை தொடர்பில் சகல ஊழியர்களுக்கும் இளைப்பாற்று பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. இவ்விடயம் ஐந்தொகையில் நடைமுறை சாரா பொறுப்புக்களின் கீழ் குழுவாக்கப் பட்டுள்ளது.

## 6. ஒப்பீட்டுரீதியிலான தகவல்

அவசியப்படுமிடத்து, நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்திற்கு இணக்குவதற்காக ஒப்பீட்டுரீதியிலான எண்ணிக்கைகள் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

## 7. ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறுகின்ற நிகழ்வுகள்

சகல பொருள் ஐந்தொகைக்கு முந்திய நிகழ்வுகள் கரிசனைக்கெடுக்கப்பட்டு ள்ளதுடன், பொருத்தமானவிடத்து, நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளின் அமைப்பில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

## 8. பணப்புழக்கக் கூற்று

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி பணப்புழக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு ள்ளது.

## 9. தொழிற்பாட்டிலான மற்றும் சமர்ப்பணத்திலான நாணயம்

இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதுவே க.சூ.பா.அ.அ.இன் தொழிற் பாட்டிலான நாணயமாகும்.

## 4.2 நிதிசார் நிலையின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### நிதிசார் நிலையின் கூற்று
### 2012 டிசம்பர் 31இல் உள்ளவாறு

| **சொத்துக்கள்** | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| | | | |
| கடன்தருனர்கள் | 11 | 13,500.00 | 16,935.00 |
| வைப்புகள் | 12 | 1,219,100.00 | 1,137,800.00 |
| முன்-கொடுப்பனவுகள் | 13 | 597,394.81 | 370,250.73 |
| அறவிடப்பட வேண்டிய பணியாளர் கடன் | 14 | 5,633,670.23 | 6,257,776.56 |
| குறுகிய கால மூலதனம் (திறைசேரி உண்டியல்கள்) | | 11,755,525.00 | 10,709,913.55 |
| பண மீதி | 10 | 5,512,790.27 | 13,619,138.16 |
| **நடைமுறைசாராச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்கள் | 09 | 43,404,750.36 | 39,814,309.96 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 68,136,730.67 | **71,926,123.96** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| திரண்ட கொடுப்பனவுகள் | 15 | 2,372,439.26 | 10,837,615.91 |
| EIA கருத்திட்ட வைப்புக்கள் | 21 | 486,990.50 | - |
| முன்-கொடுப்பனவிலான வருமானக் கணக்கு | 22 | 1,694,000.00 | - |
| **நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | | | |
| கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | 20 | 13,355,525.74 | 12,309,913.55 |
| இடுக்கண் கடனுக்கான நிதியங்கள் | 16 | 6,565,640.22 | 6,389,200.68 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17 | 4,480,874.50 | 3,756,087.50 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **28,955,470.22** | **33,292,817.64** |
| **நிகர சொத்துக்கள்** | | **39,181,261.00** | **38,633,306.31** |
| **ஒப்புரவு** | | | |
| அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம் | 18 | 43,404,750.36 | 39,814,311.09 |
| திரண்ட மேன்மிகை/பற்றாக்குறை | 19 | (4,223,489.36) | (1,181,004.78) |
| **மொத்த ஒப்புரவு** | | **39,181,261.00** | **38,633,306.32** |

## 4.3 நிதிசார் நிலையின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### நிதிசார் நிலையின் கூற்று
### 2012 டிசம்பர் 31இல் உள்ளவாறு

| | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| திறைசேரி உதவுதொகைகள் | 1 | 79,902,066.62 | 53,327,215.80 |
| பதிவு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் | 2 | 10,033,547.94 | 9,242,201.03 |
| வேறு வருமானம் | 3 | 1,095,406.19 | 969,145.95 |
| **மொத்த வருமானம்** | | **91,031,020.75** | **63,538,562.78** |
| **செலவினம்** | | | |
| சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 4 | 39,005,981.99 | 29,670,533.99 |
| விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவைகள் | 5 | 4,329,712.86 | 2,852,673.76 |
| வேறு மீளவரும் செலவினம் | 6 | 13,081,247.73 | 11,975,763.90 |
| உதவுதொகை மற்றும் வேறு கைமாற்றத்திலான கொடுப்பனவு | 7 | 26,924,095.44 | 13,031,810.11 |
| நிதிசார் செலவினங்கள் | 8 | 47,162.10 | 40,142.30 |
| மதிப்பிறக்கம் மற்றும் கடன் தீர்ப்புச் செலவினங்கள் | 9 | 9,457,531.25 | 5,825,405.76 |
| **மொத்தச் செலவினம்** | | **92,845,731.37** | **63,396,329.82** |
| **காலத்திற்கான மேன்மிகை/(பற்றாக்குறை)** | | **(1,814,710.62)** | **142,232.96** |

## 4.4 ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

### 2012 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான

### நிகர சொத்துக்களில்/ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

| | மூலதன உதவுதொகை (ரூபா) | திரண்ட மேன்மிகை/ பற்றாக்குறை (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| 31/12/2011இல் உள்ளவாறு மீதி | 22,359,482.03 | 1,166,807.12 | 23,526,289.14 |
| மூலதன உதவுதொகைக்கு கைமாற்றம் | | (2,490,044.86) | |
| 01.01.2012இல் உள்ளவாறு மீள்-குறிப்பிடப்பட்ட மீதி | 22,359,482.03 | (1,323,237.74) | 21,036,244.29 |
| கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 36,312,044.86 | - | 36,312,044.86 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை (SLAS 24) | (18,857,215.80) | - | (18,857,215.80) |
| ஆண்டுக்கான மேன்மிகை/ (பற்றாக்குறை) | | 142,232.96 | 142,232.96 |
| **31/12/2012இல் உள்ளவாறு மீதி** | 39,814,311.09 | (1,181,004.78) | 38,633,306.31 |

## 4.5 பணப்புழக்கக் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### பணப்புழக்கக்கூற்று கூற்று
### 2012ஆம் ஆண்டுக்கு

| | 2012 | 2011 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| காலத்திற்கான நிகர மேன்மிகை/(பற்றாக்குறை) | (1,814,710.62) | 142,232.96 |
| **சீராக்கல்கள்** | | |
| ஆண்டுக்காக புறம்பாக்கப்பட்ட மதிப்பிறக்கம் | 9,457,531.25 | 5,825,405.76 |
| ஆரம்ப மீதிக்கான சீராக்கல்கள் | - | |
| முற்பணச் செலவினத்திற்கான கைமாற்றம் | - | 84,937.50 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 782,647.00 | 889,165.00 |
| பணிக்கொடை - கொடுப்பனவு | (57,860.00) | - |
| SLAS 24இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருமானம் (முன்னைய ஆண்டுகளிலிருந்து கிடைத்த உதவுதொகைகளிலிருந்து) | (36,381,626.62) | (18,857,215.80) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன் தொழிற்படு மேன்மிகை/ பற்றாக்குறை** | **(28,014,018.99)** | **(11,915,474.59)** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| வைப்பில் (அதிகரிப்பு)/குறைப்பு) | (81,300.00) | (657,000.00) |
| முன்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைப்பு) | (227,144.08) | 163,287.62 |
| கடன்தருனர்களில் (அதிகரிப்பு)/குறைப்பு) | 3,435.00 | (3,435.00) |
| நடைமுறைப் பொறுப்புக்களில் குறைப்பு/அதிகரிப்பு | (8,465,176.65) | 10,563,775.43 |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | **(36,784,204.72)** | **(1,848,846.54)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகள்** | | |
| திறைசேரி உண்டியல்களில் மூலதனம் | (11,755,525.00) | (10,709,913.55) |
| திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சி | 10,709,913.55 | 9,999,999.75 |
| ஆதனம், பொறி, சாதனத்தின் கையகப்படுத்தல் | (3,303,678.52) | (4,570,279.08) |
| திறைசேரி உண்டியல்களில் மூலதனத்திலிருந்து வட்டி | 1,045,612.19 | 709,913.55 |
| பணியாளர் கடன்களிலிருந்து வட்டி | 176,439.54 | 184,489.46 |
| அறவிடப்பட வேண்டிய பணியாளர் கடனில் (அதிகரிப்பு)/ குறைப்பு | 624,106.33 | (2,327,861.80) |
| முன்-கொடுப்பனவிலான வருமானக் கணக்கு | 1,694,009.00 | - |
| EIA வைப்பு | 500,000.00 | - |
| EIA கொடுப்பனவு | (13,009.50) | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | **(322,141.41)** | **(14,223,606.83)** |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகள்** | | |
| MT Granba நிகழ்விலிருந்து கிடைத்த நிதியம் | | |
| மூலதன செலவினத்திற்கு அரசாங்க உதவுதொகை | 29,000,000.00 | 22,622,000.00 |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து நிகர பணம்** | 29,000,000.00 | **22,622,000.00** |
| **பணத்திலும், பண சமப்படுத்தல்களிலும் நிகர அதிகரிப்பு/குறைப்பு** | **(8,106,346.13)** | **6,549,546.91** |
| **ஆண்டின் ஆரம்பத்தில் பண மற்றும் பண சமப்படுத்தல்கள்** | **13,619,137.73** | **7,069,591.10** |
| **ஆண்டின் இறுதியில் பண மற்றும் பண சமப்படுத்தல்கள்** | **5,512,790.27** | **13,619,137.73** |

## 4.6 நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

### நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு 01** | **திறைசேரி உதவுதொகைகள்** | |
|---|---|---|
| **திறைசேரி உதவுதொகைகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| மீளவரும் உதவுதொகை | 43,520,440.00 | 34,470,000.00 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை – நடப்பு வருடம் | 26,924,095.44 | 13,031,810.11 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை – பின்போடப்பட்ட உதவுதொகை | 9,457,531.18 | 5,825,405.69 |
| **மொத்தம்** | **79,902,066.62** | **53,327,215.80** |

| **குறிப்பு 02** | **கட்டணங்கள் மற்றும் அபராதங்கள்** | |
|---|---|---|
| **கட்டணங்கள் மற்றும் அபராதங்கள், தெண்டங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| கழிவு உபசரணை சேவை – பதிவுக் கட்டணம் | 3,993,900.00 | 2,040,500.00 |
| கழிவு உபசரணை சேவை – அனுமதிச்சீட்டுக் கட்டணம் | 4,652,500.00 | 3,839,000.00 |
| கழிவு உபசரணை சேவை – விண்ணப்பக் கட்டணம் | 30,000.00 | 9,000.00 |
| கழிவு உபசரணை சேவை – விண்ணப்பக் கட்டணம் (2011க்கு 2010 கிடைத்தவை) | 18,000.00 | 31,000.00 |
| இயற்கை வளங்கள் பிரித்தெடுப்பு – அனுமதிச்சீட்டுக் கட்டணம் | 119,225.40 | 3,289,803.00 |
| இயற்கை வளங்கள் பிரித்தெடுப்பு – விண்ணப்பக் கட்டணம் | 11,922.54 | 32,898.03 |
| எண்ணெய் ஏற்றி, இறக்குதல் விண்ணப்பக் கட்டணம் | 14,000.00 | - |
| எண்ணெய் ஏற்றி, இறக்குதல் பதிவு -2012 | 1,050,000.00 | - |
| வீதி தாங்கிகள் பதிவு - எண்ணெய் ஏற்றி, இறக்குதல் | 40,000.00 | - |
| NOSCOP விண்ணப்பக் கட்டணம் மற்றும் அங்கீகாரக் கட்டணம் | 104,000.00 | - |
| **மொத்தம்** | **10,033,547.94** | **9,242,201.03** |

| **குறிப்பு 03** | **வேறு வருமானம்** | |
|---|---|---|
| **வேறு வருமானம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| சில்லறை வருமானம் | 617,539.05 | 377,150.00 |
| புத்தக முற்பண வட்டி | 2,842.70 | 3,154.19 |
| வட்டி வருமானம் | 475,024.44 | - |
| காசோலை இரத்தாக்கல் | - | 10,125.00 |
| **மொத்தம்** | **1,095,406.19** | **390,429.19** |

| குறிப்பு 04 | ஆளணியினர் வேதனாதிகள் | |
|---|---|---|
| **வேதனாதிகள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| சம்பளங்கள் மற்றும ஊதியங்கள் | 36,363,226.78 | 25,196,278.83 |
| மேலதிக நேரவேலை/விடுமுறைக் கொடுப்பனவு | 613,678.21 | 469,969.83 |
| வேறு படிகள் | 1,217,500.00 | 72,600.00 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 811,577.00 | 602,947.50 |
| **மொத்தம்** | **39,005,981.99** | **26,341,796.16** |

| குறிப்பு 05 | விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவை | |
|---|---|---|
| **விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவை** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| **5.01 விநியோகங்கள்** | | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 972,732.12 | 493,150.46 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 1,329,504.06 | 817,535.50 |
| சீருடைகள் | 56,235.12 | 143,608.00 |
| **மொத்தம்** | **2,358,471.30** | **1,454,293.96** |
| **5.02 பராமரிப்புச் செலவினம்** | | |
| வாகனங்களின் பராமரிப்பு | 1,520,724.62 | 870,473.94 |
| பொறி, எந்திரங்கள், சாதனங்களின் பராமரிப்பு | 415,047.93 | 473,696.86 |
| அலுவலகப் பராமரிப்பு | 35,469.00 | 54,209.00 |
| **மொத்தம்** | **1,971,241.56** | **1,398,379.80** |

| குறிப்பு 06 | வேறு மீளவரும் செலவினம் | |
|---|---|---|
| | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| **6.01 பிரயாணம்** | | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 1,440,485.07 | 1,116,257.86 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 310,350.25 | 1,048,923.61 |
| | **1,750,835.32** | **2,165,181.47** |

| **6.02 ஒப்பந்தச் சேவைகள்** | | |
|---|---|---|
| தொலைத்தொடர்பு/தபாலிடல் கட்டணங்கள் | 923,152.72 | 716,585.48 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1,726,397.73 | 1,342,482.69 |
| அலுவலக வாடகை | 6,554,887.53 | 5,932,135.00 |
| வேறு ஒப்பந்தச் சேவைகள் | 2,125,974.43 | 1,656,091.49 |
| 2011க்கு முன்கொடுப்பனவாகிய செலவினங்கள் (முன்னைய வருடத்தின் போது கொடுப்பனவாகியது) | - | 533,538.35 |
| 2012க்கு முன்கொடுப்பனவாகிய செலவினங்கள் (2011இன் போது கொடுப்பனவாகியது) | - | (370,250.58) |
| **மொத்தம்** | **11,330,412.41** | **9,810,582.43** |

| **குறிப்பு 07** | **உதவு தொகை மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள்** | |
|---|---|---|
| **உதவு தொகை மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| ஆண்டுக்கான மொத்த மூலதன உதவுதொகை | 39,827,773.96 | 36,312,044.86 |
| **கழிக்குக:** | | |
| மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட தொகை | (12,903,678.52) | (23,280,234.75) |
| **ஆண்டின் போது நிதித் தொழிற்பாடுகளின் கூற்றுக்காக கைமாற்றப்பட்ட தொகை** | **26,924,095.44** | **13,031,810.11** |

| **குறிப்பு 08** | **நிதிசார் செலவினம்** | |
|---|---|---|
| **நிதிசார் செலவினம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| வங்கிக் கட்டணங்கள் | 47,162.10 | 40,142.30 |
| **மொத்தம்** | 47,162.10 | **40,142.30** |

| குறிப்பு 09 | ஆதனம், பொறி, சாதனங்களின் மதிப்பிறக்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சொத்துக்களின் வகை | ஆகுசெலவு 2013 | | | மதிப்பிறக்கம் 2013 | | | பெறுமதி பதிவழிக்கப் பட்ட |
| | 01 ஜன. 2013 | மேலதிகங் கள் | 31 டிச. 2013 | 01 ஜன. 2013 | மேலதிகங் கள் | 31 டிச. 2013 | |
| மோட்டார் வாகனங்கள் | 25,814,892.63 | 10,234,020.00 | 36,048,912.63 | 8,920,532.63 | 3,089,538.67 | 12,010,071.30 | 18,787,495.23 |
| மரத்தளபாடங்கள் மற்றும் சாதனங்கள் | 19,433,793.55 | 1,938,411.52 | 21,372,205.07 | 6,902,922.14 | 1,688,407.55 | 8,591,329.69 | 10,594,756.28 |
| தொழில்நுட்பச் சாதனங்கள் | 17,803,678.49 | 731,247.00 | 18,534,925.49 | 1,589,194.08 | 1,047,459.54 | 2,636,653.62 | 14,022,497.75 |
| மொத்தம் | **63,052,364.67** | **12,903,678.52** | **75,956,043.19** | **17,412,648.84** | **5,825,405.76** | **23,238,054.60** | **43,404,750.36** |

| குறிப்பு 10 | பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் | |
|---|---|---|
| **பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| இலங்கை வங்கி – 194109 | 4,580,820.28 | 13,487,714.04 |
| மக்கள் வங்கி தெமட்டகொட - 071100180004783 | 931,969.99 | 131,424.12 |
| **மொத்தம்** | **5,512,790.27** | **13,619,138.16** |

| குறிப்பு 11 | கடன்தருனர்கள் | |
|---|---|---|
| **கடன்தருனர்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| ஷெஹான் குரனரு | 13,500.00 | 13,500.00 |
| மீளவரும் முற்பணம் | - | 3,435.00 |
| **மொத்தம்** | **13,500.00** | **16,935.00** |

| குறிப்பு 12 | வைப்புக்கள் | |
|---|---|---|
| **வைப்புக்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு - பிராந்திய அலுவலகம், காலி | 96,000.00 | 96,000.00 |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு - தலைமையலுவலக குளிரூட்டல் களஞ்சியம் | 1,090,000.00 | 1,090,000.00 |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு - பிராந்திய அலுவலகம், திருகோணமலை | 7,500.00 | 7,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான ஐ.டி.டி. வசதி | 3,500.00 | 3,500.00 |
| நடமாடும் தொலைபேசிகளுக்கான மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | 1,500.00 | 1,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான இன்ரர்நெற் | 1,500.00 | 1,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான இன்ரர்நெற் | 3,000.00 | 3,000.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | 6,100.00 | 4,800.00 |
| வைப்புக்கள் - வங்கியாடல் கற்கைகள் நிலையம் | 10,000.00 | - |
| **மொத்தம்** | **1,219,100.00** | **1,137,800.00** |

| குறிப்பு 13 | முன்-கொடுப்பனவுகள் | |
|---|---|---|
| **முன்-கொடுப்பனவுகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| வாடகை | 112,142.47 | 180,100.00 |
| காப்புறுதி | 301,938.33 | 153,254.90 |
| பராமரிப்பு | 181,637.31 | 4,656.90 |
| வேறு செலவினங்கள் | 1,676.71 | 32,238.78 |
| **மொத்தம்** | **597,394.81** | **370,250.58** |

| குறிப்பு 14 | அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள் | |
|---|---|---|
| **அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,257,776.56 | 3,929,914.76 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் | 2,120,055.56 | 4,939,000.00 |
| மொத்த அறவிடக்கூடிய தொகை | 8,377,832.12 | 8,868,914.76 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை | 2,744,161.89 | 2,611,138.20 |
| **31.12.2012இல் உள்ளவாறு மீதி** | **5,633,670.23** | **6,257,776.56** |

| குறிப்பு 15 | நடைமுறைப் பொறுப்புக்கள் | |
|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| கடன்தருனர்கள் | 1,874,745.83 | 10,534,736.45 |
| WRS விண்ணப்பம் மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணம் | - | 18,000.00 |
| கொடுப்பனவுக்குரிய மின்சார மற்றும் நீர் சிட்டை | 121,521.07 | 107,457.38 |
| கொடுப்பனவுக்குரிய வாடகை | 32,000.00 | 11,130.00 |
| கொடுப்பனவுக்குரிய தொலைபேசி சிட்டை | 62,188.25 | 54,867.37 |
| ஹொல்சிம் லங்கா பிறை. லிமிற். | 108,228.00 | - |
| கொடுப்பனவுக்குரிய வேறு செலவினங்கள் | 53,630.00 | 111,424.71 |
| வாகனப் பராமரிப்புச் செலவினம் | 200.00 | - |
| கொடுப்பனவுக்குரிய மேலதிகநேர வேலை/பட்டியலின்படி விடுமுறைக் கொடுப்பனவு | 20,977.11 | - |
| பட்டியலின்படி கொடுப்பனவுக்குரிய வேறு படிகள் | 86,750.00 | - |
| பட்டியலின்படி கொடுப்பனவுக்குரிய உள்நாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 12,099.00 | - |
| கொடுப்பனவுக்குரிய முத்திரைத் தீர்வை | 100.00 | - |
| **மொத்தம்** | **2,372,439.26** | **10,837,615.91** |

| குறிப்பு 16 | பணியாளர் கடன் நிதியம் | |
| --- | --- | --- |
| **பணியாளர் கடன் நிதியம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,389,200.68 | 6,204,711.22 |
| **கூட்டுக:** | | |
| கிடைத்த மேலதிகமான நிதியம் | - | - |
| ஆண்டுக்கான வட்டி | 176,439.54 | 187,125.46 |
| **கழிக்குக:** | | |
| வங்கிக் கட்டணங்கள் | - | 2,636.00 |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் கடன் மீதி** | **6,565,640.22** | **6,389,200.68** |

| குறிப்பு 17 | பணிக்கொடைக்கான ஏற்பாடு | |
| --- | --- | --- |
| **பணிக்கொடைக்கான ஏற்பாடு** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 3,756,087.50 | 2,866,922.50 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 782,647.00 | 889,165.00 |
| **கூட்டுக:** | **4,538,734.50** | **3,756,087.50** |
| **ஆண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவுகள்** | **57,860.00** | **-** |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **4,480,874.50** | **3,756,087.50** |

| குறிப்பு 18 | அரசாங்க உதவுதொகை மற்றும் மூலதனம் | |
| --- | --- | --- |
| **அரசாங்க உதவுதொகை மற்றும் மூலதனம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 39,814,311.09 | 22,359,482.03 |
| பினபோடப்பட்ட வருமானத்திற்குச் சுமத்தப்பட்ட மேலதிகக் கட்டணத்தின் மறுதலைக்கான திருத்தங்களின் செம்மைப்படுத்தல் | 144,291.93 | |
| **கூட்டுக:** | | 39,827,773.96 |
| ஆண்டின் போது கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 79,786,376.98 | 58,671,526.89 |
| **கழிக்குக:** | | |
| வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது (SLAS 24) | 36,381,626.62 | 18,857,215.80 |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **43,404,750.36** | **39,814,311.09** |

| குறிப்பு 19 | திரண்ட பற்றாக்குறை | |
|---|---|---|
| **திரண்ட பற்றாக்குறை** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | (1,181,004.78) | 1,166,807.12 |
| தவறுக்கான செம்மைப்படுத்தல் | | |
| பின்போடப்பட்ட வருமானத்திற்கான கைமாற்றம் | (1,227,773.96) | (2,490,044.86) |
| ஆண்டுக்கான பற்றாக்குறை/மேன்மிகை | (1,814,710.62) | 142,232.96 |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **(4,223,489.36)** | **1,181,004.78** |

| குறிப்பு 20 | கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | |
|---|---|---|
| **கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 12,309,913.55 | 11,600,000.00 |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | 1,045,612.19 | 709,913.55 |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **13,355,525.74** | **12,309,913.55** |

| குறிப்பு 21 | EIA வைப்புக் கணக்கு | |
|---|---|---|
| **EIA வைப்புக் கணக்கு** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | - | - |
| கிடைத்த நிதியங்கள் | 500,000.00 | - |
| **கழிக்குக:** | 500,000.00 | - |
| ஆண்டின் போது ஏற்கப்பட்ட செலவினம் | 13,009.50 | - |
| **31.12.2012இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **486,990.50** | - |

| குறிப்பு 22 | முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் | |
|---|---|---|
| **முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 2013க்கான WRS பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 1,646,000.00 | - |
| 2013க்கான பங்கரிங் பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 48,000.00 | - |
| மொத்தம் | **1,694,000.00** | - |

23. 2011 நொவம்பரில் 6-மாத திறைசேரி உடனுண்டியல்களில் அதிகாரசபை ரூபா 10 மில்லியனை முதலீடு செய்ததுடன், இது 2012ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்ததுடன், மொத்தத் தொகை (வட்டி மற்றும் முதலீட்டுத் தொகை) திறைசேரி உண்டியல்களில் மீள்-முதலீடு செய்யப்பட்டது. திறைசேரி உடனுண்டியல்களிலிருந்து வட்டி வருமானமாக 2012ஆம் ஆண்டின் போது ரூபா 1,045,612.19 ஈட்டப்பட்டது. எனவே மீள்-முதலீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 11,755,525.00 ஆகும்.

24. நாளாந்த அடிப்படை மீது திறைசேரி உடனுண்டியல்களை மீள்-கொள்வனவு செய்வதற்காக நடைமுறைக் கணக்கில் நாளின் இறுதியில் மேன்மிகையிலான பண மீதியை முதலீடு செய்வதை அதிகாரசபை ஆரம்பித்தது. இந் நடைமுறை ஆண்டின் இறுதிவரை தொடர்ந்ததுடன், வட்டி வருமானமாக ரூபா 475,024.44 பெறப்பட்டது. ஆண்டின் மொத்த வருமானத்தில் இந்த வட்டி வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

25. ஆண்டின் போது எண்ணெய் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக சூழல் பாதுகாப்பு அனுமதிச்சீட்டினை வழங்குவதன் மூலம் வருமானமாக ரூபா 131,147.94ஐ அதிகாரசபை ஈட்டியது. ஆண்டின் போது ரூபா 4,000இலிருந்து ரூபா 5,000க்கு WRS அனுமதிச்சீட்டுக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் ரூபா 8,694,400.00 வரை WRS அனுமதிச்சீட்டு கட்டணத்திலிருந்து அதன் வருமானத்தை அதிகாரசபையினால் அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.

26. ஆண்டின் போது ரூபா 12,903,678.52 பெறுமதியான நிலையான சொத்துக்களை அதிகாரசபை பெற்றுக்கொண்டது. பொதுத் திறைசேரியிலிருந்து வாகன உதவுதொகையாக பெறப்பட்ட ரூபா 9,600,000 கொண்ட தொகையொன்றை மேற்படி சொத்துக்களின் (01 வேன்) பெறுமதி உள்ளடக்குகின்றது. மேற்படி உதவு தொகைக்கு மேலதிகமாக ஏனைய சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்காக ரூபா 3,303,678.52 பெறப்பட்டது. அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கணனிகள் மற்றும் கணனி மென்கணியம் மற்றும் ஆண்டின் போது அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியனவற்றை இச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன.

27. 2012இன் இல.01 எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தாபனம் அல்லது மக்கள் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசரகாலத் திட்டமொன்றைக் கொண்டிருக்கவேண்டும். ஆண்டின் போது அதிகாரசபை 2 அவசரகாலத் திட்டங்களை அங்கீகரித்ததுடன், அங்கீகாரக் கட்டணமாக ரூபா 104,000.00ஐ ஈட்டியது. இந்த அங்கீகாரக் கட்டணம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

28. 2011இன் இல.02 எண்ணெய் ஏற்றுதல், இறக்குதல் (கடல்சார் சூழல் பாதுகாப்பு) ஒழுங்குவிதியின் பிரகாரம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தாபனம் அல்லது மக்கள் ஒவ்வொரு வருடமும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொள்ள வேண்டும். ஆண்டின் போது எண்ணெய் நிரப்புதல், ஏற்றுதல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 8 நிறுவனங்கள் அதிகாரசபையுடன் பதிவுசெய்ததுடன், விண்ணப்ப மற்றும் பதிவுக் கட்டணங்களாக ரூபா 11,040,000.00ஐ ஈட்டியது. இந்த வருமானம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

29. 01.01.2012இலிருந்து செயற்படத்தக்கதாக சூ.தா.ம. (சூழல் தாக்க மதிப்பீடு) அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதில் ஏற்படுகின்ற செலவினங்களை உள்ளடக்குவதற்காக படிநிலைப்படுத்தல் கட்டணமொன்றைச் சுமத்துவதென அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இதன் பிரகாரம் ஆண்டின் போது சூ.தா.ம. அறிக்கைகளைப் பெறுவதற்காக ரூபா 500,000.00 கொண்ட வைப்பொன்றை கேர்ன் லங்கா கம்பெனி செய்தது. சூ.தா.ம. நடைமுறையுடன் தொடர்பான செலவினத்தைக் கழித்த பின்னர் பணத்தின் மீதியானது நிதிசார் நிலையின் கூற்றில் 'நடைமுறை பொறுப்புக்களின்' கீழ் 'சூ.தா.ம. கருத்திட்ட வைப்பாக' காட்டப்பட்டுள்ளது.

30. 2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களம் மீளவரும் செலவினத்திற்காகவும், மூலதன செலவினத்திற்காகவும் முறையே ரூபா 64.164 மில்லியனையும் (அதிகாரசபையின் வருமானம் உட்பட), 46.4 மில்லியனையும் ஒதுக்கியுள்ளது. 2012ஆம் ஆண்டுக்கு தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தின் பரிந்துரையினதும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால்

விடுவிக்கப்பட்ட நிதியங்களினதும் உண்மையான செலவினத்தினதும் விபரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2012க்கான ஒதுக்கீடுகள் | 2012 தேசிய வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு | 2012க்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட | 31.12.2012இல் உள்ளவாறு உண்மையான செலவினம் |
|---|---|---|---|---|
| மீளவரும் செலவினம் | 64,164,000.00 | 54,164,000.00 | 43,520,440.00 | 55,879,672.78 |
| மூலதன செலவினம் | 36,400,000.00 | 30,625,000.00 | 19,000,000.00 | 18,675,840.90 |
| எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம் | 10,000,000.00 | 10,000,000.00 | 10,000,000.00 | 11,551,933.06 |
| வாகனத்திற்கு திறைசேரி உதவுதொகை | 9,600,000.00 | - | - | 9,600,000.00 |
| மொத்தம் | 120,164,000.00 | 94,789,000.00 | 72,520,440.00 | 95,707,446.74 |

மீளவரும் செலவினமாக ஆண்டின் போது ரூபா 54,164,000.00ஐ விடுவிக்குமாறு தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களம் பரிந்துரைத்தது. எனினும், மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் மீளவரும் செலவினத்திற்காக உண்மையாக ரூபா 43,520,440.00 மட்டுமே விடுவிக்கப்பட்டது. ஆண்டின் போது மொத்த மீளவரும் செலவினம் ரூபா 55,879,672.78 என்பதுடன், இதில் தனிப்பட்ட வேதனங்களாக ரூபா 38,194,404.99 (68%) செலவழிக்கப்பட்டது. திறைசேரியிலிருந்து மீளவரும் செலவினத்திற்காக கிடைத்த உதவுதொகைக்கு மேலதிகமாக, அதன் செயற்பாடுகள் ஊடாக ரூபா 11.2 மில்லியனை அதிகாரசபை ஈட்டியதுடன், இதை மீளவரும் செலவினத்திற்காக அதிகாரசபை செலவழித்தது. இதனால் அதிகாரசபையினால் செய்யப்பட்ட சகல சம்பாத்தியங்களும் அவசியமான மீளவரும் செலவினங்களை நிறைவேற்றுவதற்காக ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காலமொன்று தொடர்பில் வருமானம் அதே காலத்தினுள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதனால் மீளவரும் உதவுதொகையின் கிடைக்க வேண்டிய மீதி (ரூபா 10,644 மில்லியன்) (விடுவிப்பதற்காக தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட உதவுதொகை) காலத்திற்கான கிடைக்க வேண்டிய வருமானமொன்றாக அங்கீகரிக்கப்பட முடியும்.

அதை வருமானமொன்றாக நாம் அங்கீகரித்தால் நிதிசார் செயல் நிறைவேற்றத்தின் கூற்று 2012ஆம் ஆண்டுக்கு மேன்மிகையொன்றை வெளிப்படுத்தும்.

அரசாங்கத்தின் வழமையான நடைமுறையின் காரணமாக 31.12.2012இல் உள்ளவாறு அரசாங்கக் கணக்குகளை மூடிய பின்னர் 2012ஆம் ஆண்டு தொடர்பில் செலவினத்தை உள்ளடக்குவதற்கு நிதியங்களை நாம் பெறமாட்டோம். எனவே, கிடைக்கவேண்டிய மீளவரும் உதவுதொகைக்காக ஆவணரீதியிலான சான்றினை நாம் கொண்டிருந்த போதிலும், நிதிசார் நிலையின் கூற்றில் கிடைக்க வேண்டிய மீளவரும் உதவுதொகையாக ரூபா 10.644 மில்லியனை காவுவதில் பிரயோசனம் இல்லை. இதன் பிரகாரம், நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்காக கிடைக்க வேண்டிய உதவுதொகையொன்றாக இத்தொகை அங்கீகரிக்கப்படவில்லை.

மூலதன செலவினமாக ஆண்டின் போது ரூபா 40,625,000.00 கொண்ட விடுவிப்பினை தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களம் பரிந்துரைத்தது. எனினும், மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது மூலதன செலவினமாக (பாணந்துறை பகுதியில் எண்ணெய் சிந்துதல் சம்பவத்தின் காரணமாக சூழல் சேதத்தைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ரூபா 10 மில்லியன் குறைநிரப்பு ஒதுக்கீடு உட்பட) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் ரூபா 29,000,000.00 மட்டுமே விடுவிக்கப்பட்டது.

ஆண்டின் போது ஏற்பட்ட மொத்த மூலதனசெலவினம் ரூபா 30,227,773.96 என்பதுடன், இதில் ஆண்டின் போது எண்ணெய் சிந்துதல் பதிலிறுப்பு செயற்பாடுகளுக்காக ரூபா 11,551,933.06 பயன்படுத்தப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் காலத்திற்கு தொடர்பான வருமானம் (உதவுதொகை) அதே காலத்தினுள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதன் பிரகாரம் மூலதன உதவுதொகை கிடைக்க வேண்டிய மீதி (ரூபா 11.625 மில்லியன்) (தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தினால் விடுவிக்கப்படுவதற்கு உறுதிப்படுத்தப்பட்ட உதவுதொகை) காலத்திற்கான கிடைக்க வேண்டிய வருமானமாக அங்கீகரிக்கப்பட முடியும். மேலே குறிப்பிட்டவாறு மூலதன உதவுதொகைக்கும் அதே நடைமுறை பிரயோகிக்கத்தக்கதாகும். எனவே, கிடைக்க வேண்டிய மூலதன உதவுதொகைக்கு ஆவணரீதியிலான சான்றினை நாம் கொண்டிருக்கின்ற போதிலும் நிதிசார் நிலையின் கூற்றில் கிடைக்க வேண்டிய மூலதன உதவுதொகையாக ரூபா 11.625 மில்லியனை காவுவதில் பிரயோசனம் இல்லை. இதன் பிரகாரம், நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்காக மூலதன உதவுதொகையொன்றாக இத்தொகை அங்கீகரிக்கப்படவில்லை.

**குறிப்பு:**

**தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தினால் விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட நிதியங்களைப் பெறுவதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் ஒரு தொடரிலான கலந்துரையாடல்களை இந்த அதிகாரசபை கொண்டிருந்தது. எனினும், நிதியங்கள் கிட்டாததன் காரணமாக இவை வெற்றியடையவில்லை. எனவே, 2012 செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பெருமளவு செயற்பாடுகள் 2012ஆம் ஆண்டின் போது இரத்துச்செய்யப்பட்டன.**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. : ரீஎம்/எல்/எம்சபீஏ/எப்ஏ/2012    ඔබේ අංකය / உமது இல / Your No. :    දිනය / திகதி / Date : 2013 ஆகஸ்ட் 30

தலைவர்,
கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை.

**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 மே 06 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone : 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No : 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail : oaggov@sltnet.lk

கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்க விதித் தேவைப்பாடுகளுடன் நான் அமைவுறுவதையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதனையும் இந்நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவதனை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகளானது மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படச் சாத்தியமான பொருண்மையான தவறான கூற்றுக்களின் இடர் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாக கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையில் அமைந்திருந்தன. அவ் இடர்களை மதிப்பிடுகையில் சந்தர்ப்பத்திற்கேற்ற பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்கு ஏற்றவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கும் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள் கணக்காய்வாளரினால் கருத்திற்கொள்ளப்பட்ட போதிலும் அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைவுதிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் அதன் அர்த்தமாக இருக்கவில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தினை மதிப்பாய்தல் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 100 அறிவித்தல் பலகைகளின் கிரயமான ரூபா 3,287,500 இனை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யாது அது செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 188,888 பெறுமதியான நூலகப் புத்தகங்களை சொத்தாக கணக்கீடு செய்யாது செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கு முன்னரிலிருந்து காணப்பட்டுவரும் ஆராய்ச்சி அறிக்கைகள் மற்றும் நூலகப் புத்தகங்களின் பெறுமதியினை கணிப்பிட்டு சொத்துக்கள் கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 3,858,584 பெறுமதியான 5,800 லீற்றர் தடுப்பு எண்ணையின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.2.1 ஆம் பந்தி | மதிப்பீட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 6.5.1 ஆம் பந்தி | வரைபு வருடாந்த அறிக்கை கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அதிகாரசபையின் பொது முகாமையாளரால் 80 சந்தர்ப்பங்களில் 5,890 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு குழாம் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

3 **நிதி மீளாய்வு**

3.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நிதி விளைவுகள் ரூபா 1,814,711 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 142,233 மிகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,956,944 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 29 மில்லியனால் அதிகரித்திருந்தமையே இவ்வதிகரிப்பிற்கு பிரதான காரணமாகியிருந்தது.

3.2 **பகுப்பாய்வு ரீதியிலான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டைக் காட்டிலும் மீளாய்வாண்டில் நிதி விளைவுகள் ரூபா 1.956 மில்லியனால் வீழ்ச்சியுற்றமைக்கு பின்வரும் முரண்கள் காரணமாகியிருந்தன.

| விடயம் | 2012 | 2011 | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் % |
| மொத்த மீண்டெழும் மானியம் | 79.902 | 53.327 | 26.575 | 49.83 |
| செயற்பாட்டு வருமானம் | 10.034 | 9.242 | 0.792 | 8.56 |
| மொத்த வருமானம் | 91.031 | 63.538 | 27.493 | 43.27 |
| மொத்த செயற்பாட்டுச் செலவினம் | 92.846 | 63.396 | 29.450 | 46.45 |

மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 8.56 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் அதனோடு ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டின் செலவினத்தைக் காட்டிலும் 43.45 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் வருமானத்துடன் செலவினத்தை ஒப்பிடுகையில் செயற்பாட்டு வருமானம் ரூபா 82.812 மில்லியனால் மிகைத்து ரூபா 92.846 மில்லியன் செயற்பாட்டுச் செலவினம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1.814 வரை குறைவடைந்தமைக்கு ரூபா 72.902 மில்லியன் மொத்த மீண்டெழும் மானியம் தாக்கமளித்திருந்தது. ஏனைய படிகள் 1,577 சதவீதத்தினாலும் எரிபொருள் செலவினம் 63 சத வீதத்தினாலும் வாகன பேணுகைச் செலவினம் 76 சத வீத்தினாலும் அதிகரித்திருந்தமையே மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டைக் காட்டிலும் அதிகரிப்பதற்கு தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் மொத்த நிதிஏற்பாடு ரூபா 36,400,000 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், உள்ளவாறான செலவினம் ரூபா 18,391,390 ஆக இருந்தது. அது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 12 செயற்பாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,100,000 ஆன நிதிஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத 03 கருமங்கள் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அம்மூன்று கருமங்களிற்கான ஏற்பாடுகள் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 05 கருமங்களுக்கான நிதிஏற்பாடுகளில் 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம், 2012 திசெம்பர் மாதத்தில் திருத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயல்நடடிக்கைத் திட்டமானது கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.2 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

09 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 90,500 தொகையான முற்பணங்கள் மீள தீர்வு செய்யப்பட்டிருந்தன. அதன் படி உத்தியோகத்தர்களினால் தேவையற்ற விதத்தில் பணம் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகைகளில் 50 சதவீதத்திற்கும் மேல் மீளளிக்கப்பட்டிருந்த 25 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. முகாமைத்துவத்தினால் அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்யாது பயன்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 **செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 நவம்பர் 13 ஆந் திகதி கப்பலொன்றிலிருந்து கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெற்றிருந்த எண்ணைக் கசிவினால் ஏற்பட்டிருந்த கடல்சார் மாசடைதல் தொடர்பில் 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 26 (அ) பிரிவின் கீழ் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் தாமதமாக இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 12 ஆய்வுகூட பரிசோதனை வகைகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 05 பரிசோதனை வகைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் கடல் நீர் மிகவும் அசுத்தமடைந்த நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்ட போதிலும், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தவிர்த்து அது தொடர்பில் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 34(1) ஆம் பிரிவின் படி நீர் மாசடைதல் தொடர்பில் தனிநபர்களும் நிறுவனங்களும் பொறுப்புக்கு உள்ளாவதுடன் அதிகாரச்சட்டத்தின் 54(2)(இ) மற்றும் (கி) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பணிப்புரைகளைத் தயாரிக்காமை காரணமாக சுற்றாடல் பாதிப்புக்காக இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு அல்லது சுற்றாடல் பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தமையால் ஆய்வுகூடங்களை நிறுவும் குறிக்கோள் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 **சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமாக அமுலாக்கப்பட்டிருந்த 150 அறிவித்தல் பலகைகளை நிறுவுவதற்காக ரூபா 4,931,250 தொகைக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சுக்கு முரணாக 100 அறிவித்தல் பலகைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 112,500 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அறிவித்தல் பலகைகளைப் பொருத்தும் இடங்களைக் குறிப்பிடும் வரைபடமொன்று இல்லாமையால் அறிவித்தல் பலகைகள் திட்டமிட்ட படி நிறுவப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| பொருட்கள் | எண்ணிக்கை | பெறுமதி | கொள்வனவு செய்யப்பட்ட திகதி | பயன்படுத்தப்படாதிருந்த காலம் (2013.03.31 இல் உள்ளபடி) |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| படகு என்ஜின் | 01 | 510,000 | 2012.04.27 | 11 மாதங்கள் |
| டிங்கி படகு | 01 | 672,000 | 2012.05.14 | 10 மாதங்கள் |
| மடிப்புக் கட்டில்கள் | 03 | 29,550 | 2010.09.27 | 02 ஆண்டுகள் 06 மாதங்கள் |
| மெத்தைகள் (ஒற்றை) | 09 | 28,800 | 2010.09.27 | 02 ஆண்டுகள் 06 மாதங்கள் |
| கலந்துரையாடல் மேசை | 02 | 29,747 | 2011.04.28 | 01 ஆண்டு 06 மாதங்கள் |
| Colony counter complete with PC software | 01 | 131,404 | 2010.12.28 | 02 ஆண்டுகள் 03 மாதங்கள் |
| Vacuum manifold system with vacuum pump | 01 | 352,800 | 2010.12.28 | 02 ஆண்டுகள் 03 மாதங்கள் |

4.6 பதவியணியினர் நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 08 | 01 | 07 |
| மூன்றாம் நிலை | 12 | 10 | 02 |
| இரண்டாம் நிலை | 43 | 30 | 13 |
| ஆரம்ப நிலை | 82 | 61 | 21 |
| மொத்தம் | 145 | 102 | 43 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொது முகாமையாளர் அடங்கலாக சிரேஸ்ட மட்டத்தில் 07 பதவிகள் 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக காணப்பட்டன. அதன் காரணமாக அதிகாரசபையின் நிர்வாக நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையில் வெற்றிடமாகக் காணப்பட்ட 06 முகாமைத்துவ மற்றும் உதவி முகாமைத்துவ பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2012 பெப்ரவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் முகாமையாளர் (சட்டம்) பதவிக்கு மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உதவி முகாமையாளர் (சட்டம்) பதவியில் பதவிவகித்த உத்தியோகத்தர், முகாமையாளர் (சட்டம்) பதவிக்கு வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பித்திருந்ததுடன் அதற்காக இருக்கவேண்டிய தகைமையான பட்டப்பின் படிப்புப் பட்டம் அதிகாரசபையால் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலின் மீது வெளிநாடு சென்று பெற்றுக்கொண்ட பட்டமாக காணப்பட்ட போதிலும் நேர்முகப் பரீட்சையில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்படி உத்தியோகத்தர், கடமைப் புறக்கணிப்பு தொடர்பில் எச்சரிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாடு செல்கையில் இடம்பெற்றிருந்த முறைகேடுகள் காரணமாக திருப்தியற்ற சேவைக் காலத்தினைக் கொண்ட நபராளதுடன் வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கையில் அவ்விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது முகாமையாளர் (சட்டம்) பதவி வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையின் பொது முகாமையாளர் 2013 மார்ச் 16 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலிருந்து அப்பதவியில் பதிற்கடைமை மேற்கொள்வதற்காக முகாமையாளர் (சட்டம்) பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

4.7 வாகனப் பயன்பாடு

2010 ஒக்தோபர் 25 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த அதிகாரசபைக்குச் சொந்தமான கெப் வாகனம் அமைச்சின் தேவைகளுக்காவன்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தப்பட்டு 2012 மே 18 ஆந் திகதி ஓடப்பட முடியாத நிலையில் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாகனம் அத்திகதியிலிருந்து 10 மாத காலமாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

5.1 **கூட்டிணைந்த திட்டம்**

5.1.1 **அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்திலுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த 2012 – 2016 கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 2012 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய 38 நிகழ்ச்சித்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காமையால் அவ்விலக்குகளை அடைய முடியாது போயிருந்தது.

(ஆ) 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் படி கடல்சார் சுற்றாடல் மன்றத்தினை நிறுவுவதற்கு இவ்வறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.1.2 **அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் அடையப்பட்டிருக்காமை**

2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 51(1) ஆம் பிரிவினால் விதிக்கப்பட்டிருந்த 11 பரிந்துரைகள் தொடர்பில் சட்டங்கள் மற்றும்

ஒழுங்குவிதிகள் தயாரித்து வர்த்தமானியில் பிரசுரித்து அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் 20 உள்ளபடியான செலவின மற்றும் வருமான விடயங்களில் 54 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் படி பாதீடானது கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டிலிருந்து துறைமுகத்திற்கு வெளியே பாணந்துறை கடலோரப் பகுதியில் நங்கூரமிட்டிருந்த கப்பலிலிருந்து எண்ணைக் கசிவு ஏற்பட்டமையால் கடல்சார் சுற்றாடல் மாசுறுதல் இடம்பெறுவதற்கான அச்சுறுத்தல் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நிதிமன்றத்தால் கடல்சார் சுற்றாடல் மாசடைவதனைத் தடுப்பதற்காக எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை இது தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்காமை காரணமாக இக்கப்பல் பாணந்துரைக் கடலில் மூழ்கி சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இடர் முகாமைத்துவ நிலையத்தினால் ஆபத்தொன்று என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இக்காலத்தில் அதிகாரசபையால் கப்பலில் காணப்பட்ட எண்ணையின் அளவை சரிவர கணிப்பிட்டு தொழில்நுட்ப அறிக்கையொன்றையேனும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(ஆ) கடல்சார் சுற்றாடல் மாசடைதல் அச்சுறுத்தலைக் குறைத்துக் கொள்வதற்காக கப்பலில் காணப்படும் எண்ணையின் அளவினை வெளியே கொண்டு வருவதற்காக கேள்விகோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்த போதிலும் கேள்விப்பத்திரங்களின் படி கப்பலில் உள்ள 800 மெற்றிக் தொன் எண்ணையினை அகற்றுவதற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்த போதிலும் பொருத்தமான வழங்குனரை தெரிவுசெய்ய முடியாதிருந்தமையால் அக்கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கடல்சார் சுற்றாடல் மாசடைதல் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் 6(ஆ) மற்றும் (ஈ) பிரிவுகளின் படி இலங்கையின் நீர்பிரதேசத்தில் அல்லது வேறேதேனும் கடல்சார் வலயங்களில் அல்லது இலங்கையின் கடலோரத்தினை அண்மித்த மற்றும் கடலோர வலயங்களில் கப்பல் சார்ந்த நடவடிக்கைகளினால் மாசடைதல் இடம்பெறுவதனை தடுப்பதற்கு, குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு மற்றும் முகாமைத்துவம் செய்யும் கருமங்களிற்கான திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று அதிகாரசபையிடம் காணப்படவில்லை.

(ஈ) கப்பலிலிருந்து ஏற்பட்ட எண்ணைக் கசிவினால் சுற்றாடலிற்கு ஏற்பட்ட பாதிப்பினைக் குறைப்பதற்காக அதிகாரசபையால் ரூபா 11,874,652 செலவிடப்பட்டிருந்தது.

(உ) அதிகாரச்சட்டத்தின் 7(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் மாசடைதல் தடுப்புக் கருமத்திற்காக இலங்கையின் கடற்பிரதேசத்தில் அல்லது வேறேதேனும் கடல்சார் வலயங்களில் அல்லது இலங்கையின் கடற்பரப்பினை அண்மித்த மற்றும் கடலோர வலயங்களில் இடம்பெற்றுவருகின்ற கடல்மார்க்க எண்ணைப் போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் நிலக்கீழ் செயற்பாடுகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் அவ்வாறான செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் மாசடைதல் தடுப்பு தொடர்பான குற்றப் பொறுப்பின் viii ஆம் பகுதியின் 26 ஆம் பிரிவின் படி ஏதேனும் கப்பலால் இலங்கையின் கடல்சார் வலயங்களில் அல்லது வேறேதேனும் கடல்சார் வலயங்களில் மாசடைதல் பொருளொன்று வெளியேற்றப்பட்டாலோ இல்லாவிட்டாலோ இப்பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் குற்றவாளியாகக் காணப்படின் ரூபா 4 மில்லியனுக்கு குறையாத மற்றும் ரூபா 15 மில்லியனுக்கு மேற்படாத அபராதத்திற்கு உட்படுதல் வேண்டும்.
அதிகாரச்சட்டத்திலுள்ள மேற்படி மாசடைதல் தடுப்பு தொடர்பான குற்றப் பொறுப்பிற்காக தேவையான சட்ட விதிகளைத் தயாரித்தல், வரைபுகள் மற்றும் வர்த்தமானியினைத் தயாரிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) இதன் காரணமாக கடல்சார் மாசடைதலுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அபராதத்திற்கு உட்படுத்துவதன் மூலம் அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தின் பிரகாரம் கடல்சார்

மாசடைதலைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஏ) கடல்சார் மாசடைதலுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு கைத்தொழில்கள் மற்றும் ஆட்களுக்கெதிராக முன்வைக்கப்படுகின்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் முறையான ஆரம்ப மற்றும் இறுதி விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடல்சார் மாசடைதலைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் அது தொடர்பில் பொருத்தமான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு கடல்சார் மாசடைதலைத் தடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி